Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 270

ஞாயிற்றுக்கிழமை
24 ஓகஸ்ட் 2025

ஆவணி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## சந்நிதியானுக்கு நேற்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 24
வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் 1.19 மணி

15

# அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் முன்னாள் ஜனாதிபதி ரணில்

### கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றம்



**கொழும்பு, ஓகஸ்ட் 24**
**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, திடீர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். இதனால், கொழும்பில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.**

15

### பிரிட்டனுக்கு

## ரணிலை அழைத்த பேராசிரியர் மறைவு

கொழும்பு, ஓக. 24
மைத்திரி விக்கிரமசிங்கவின் முனைவர் பட்டம் வழங்கும் விழாவுக்காக, முன்னாள் ஜனாதிபதி ரணிலை பிரிட்டனுக்கு வருமாறு அழைத்த வால்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சோராஜ் போல் நேற்றுமுன்தினம் காலமானார்.
அவரின் அழைப்புக்கு அமைய பிரிட்டனுக்குச் சென்றமையாலேயே ரணில் கைதாகும் நிலை ஏற்பட்டது. நேற்றுமுன்தினம் ரணிலுக்கு

14

### ரணிலுக்கு ஆதரவாக

## ஒன்றிணைந்தன எதிர்க்கட்சிகள்!



கொழும்பு, ஓக. 24
ரணிலின் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமது அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் தீர்மானிப்பதற்காக எதிர்க்கட்சிகள் நேற்று ஒன்றுகூடி நீண்டநேரம் கலந்துரையாடலில் ஈடுபட்டன.
ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன

14

## சட்டமருத்துவர் இன்மையால் முல்லைத்தீவு மக்கள் அவதி!

முல்லைத்தீவு, ஓக. 24
முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சட்டமருத்துவ நிபுணர் இல்லாத காரணத்தால் மக்களும் பொலிஸாரும் பெரும் சிரமங்களை எதிர்

15

## ரணில் கைது எதிரொலி ஐ.நா.வில் முறைப்பாடு!

கொழும்பு, ஓக. 24
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் எழுத்துபூர்வ முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

15

## தொண்டைமானாறு கடலில் நபரொருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 24
தொண்டைமானாறு காட்டுப்புலம் கடலில் இருந்து குடும்பத்தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
பரமானந்தம் இராஜேந்திரன்

15

### தையிட்டி

## விகாரைப் பிரச்சினைக்கு இந்த வருடத்தில் தீர்வு!

விரிவு பக்கம்:- 02



### இராணுவப் பிரசன்னத்துக்கு எதிரான

## நாளைய கவனவீர்ப்புப் பேரணிக்கு பருத்தித்துறை வர்த்தகர்கள் ஆதரவு

யாழ்ப்பாணம், ஓக. 24
பருத்தித்துறையில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறும், இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்குமாறும் இடம்பெறவுள்ள போராட்டத்துக்கு பருத்தித்துறை வர்த்தகர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.
யாழ்ப்பாணம் பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு எதிர்ப்பக்கமாக அமைந்துள்ள பருத்தித்துறை நீதிமன்றம், பருத்தித்துறை தபாலகம், பருத்தித்துறை நகரசபை ஆகியவற்றிற்குச் செந்தமான காணிகளை இராணுவம் தற்போது ஆக்கிரமித்து வைத்

15



## இனப்படுகொலைகளுக்கு நீதிகோரி செம்மணியில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 24
தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கு நீதிகோரியும், இன்னும் ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்தும் 'நீதியின் ஓலம்' கையொப்பப் போராட்டம் யாழ்ப்பாணம் செம்மணியில் நேற்றுச் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

15

### முச்சந்தி முரளி

'எல்லா அரசியல்வாதியளுக்கும் சிறைக்குப் போனவுடன உலகத்தில உள்ள எல்லா வருத்தமும் வந்திடும் கண்டியளோ'

## மீன் வாடியில் பயங்கரம்; மீனவர் வெட்டிக்கொலை

### வடமராட்சி கிழக்கில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 24
வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் உள்ள மீனவ வாடியில் இருந்தவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட கருத்து முரண்பாடு கத்தி வெட்டில் முடிந்துள்ளது. இதில் நெஞ்சுப் பகுதியில் ஆழமான வெட்டுக் காயங்களுக்கு உள்ளான மீனவர் ஒருவர் உயிரிழந்த நிலை

15

# சஞ்சீவி

மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹறண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 23.08.2025 | திகதி 23.08.2025 | திகதி 23.08.2025 | திகதி 23.08.2025 | திகதி 23.08.2025 | திகதி 23.08.2025 | திகதி 23.08.2025 | திகதி 23.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4172 | சீட்டிழுப்பு இலக்கம் 1239 | சீட்டிழுப்பு இலக்கம் 0198 | சீட்டிழுப்பு இலக்கம் 2278 | சீட்டிழுப்பு இலக்கம் 5930 | சீட்டிழுப்பு இலக்கம் 1960 | சீட்டிழுப்பு இலக்கம் 0505 | சீட்டிழுப்பு இலக்கம் 0046 |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கினம் துலாம் | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கினம் மேஷம் |
| | | | சுப்பர் இலக்கம் 20 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 01 07 14 55 | வெற்றி இலக்கங்கள் 07 22 25 44 | வெற்றி இலக்கங்கள் 1 4 7 3 | வெற்றி இலக்கங்கள் 10 39 42 62 | வெற்றி இலக்கங்கள் 9 8 1 8 8 7 | வெற்றி இலக்கங்கள் 20 22 32 34 | வெற்றி இலக்கங்கள் 1 8 8 7 | வெற்றி இலக்கங்கள் 02 14 34 41 |
| விசேட எழுத்து W | | | | | விசேட எழுத்து J | | |

# தையிட்டி விகாரைப் பிரச்சினை இவ்வருடத்தினுள் முற்றுப்புள்ளி

## அமைச்சர் சந்திரசேகர் உறுதி



**யாழ்ப்பாணம், ஓக.24**
**தமிழ் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நாம் மறக்க வில்லை. தையிட்டி விகாரைப் பிரச்சினையும் நிச்சயம் சுமுக மான முறையில் தீர்க்கப்படும். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், போர் முடிவடைந்து 16 வருடங் கள் கடந்துவிட்டன. போரால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் ஆற வில்லை. அதனால்தான் இப்ப டியான பிரேரணைகள் வருகின் றன. அத்துடன், வடக்கில் புலம் பெயர்வுகளைத் தடுக்கவேண் டும். அவ்வாறு இல்லையேல் யாழ்ப்பாணம் மக்கள் இல்லாத பகுதியாக மாறக்கூடும்.
வடக்கில் மிக வேகமாக அபிவிருத் தித் திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுவருகின்றன. மூன்று பிர தான தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கான நடவ டிக்கை ஆரம்பமாகியுள்ளது. அதன்பின்னர் சிறந்த தொழிற் பிரதேசமாக வடக்கு மாறும். அதன்பின்னர் எமது பகுதியை விட்டு வெளியேறுபவர்களின் எண்ணிக்கை குறையும். எமது மக்கள் மத்தியிலும் நம்பிக்கை ஏற்படும். தமிழ் மக்களின் இருப் புப் பாதுகாக்கப்படவேண்டும்.
வெளிநாடுகளில் இருந்து வரு கின்ற புலம்பெயர் தமிழர்கள் இன்று சுதந்திரமாக வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. எவ்வித பாது காப்புக் கெடுபிடிகளும் இல்லை. எமது ஆட்சி வந்து 10 மாதங்கள் கடந்துவிட்டன. தமிழ் மக்க ளுக்கு அளித்த வாக்குறுதிகளை நாம் மறக்கவில்லை. அவற்றை நடைமுறைப்படுத்துவோம்.
காணிகள் விடுவிக்கப்படும் என் பது பிரதான உறுதிமொழி. தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணி கள் படிப்படியாக விரைவில் விடு விக்கப்படும்.
தையிட்டி விகாரைப் பிரச்சினை யும் நிச்சயம் சுமுகமான முறை யில் தீர்க்கப்படும். இன்னும் ஓரிரு மாதங்களில் இந்தப் பிரச் சினைக்கு முற்றுப்புள்ளி வைக் கப்படும். காணாமல் ஆக்கப் பட்டோர், அரசியற் கைதிகள் தொடர்பான பிரச்சினைகள் பற் றியும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-26)

# ஊடகவியலாளர்களுக்குக் காப்பீடு; அடுத்தவருடம் ஆரம்பிக்கத் திட்டம்

## அமைச்சர் நளிந்த தகவல்



கொழும்பு, ஓக. 24
ஊடகவியலாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை அடுத்த வருடத்தில் ஆரம்பிக் கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித் தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஊடகத் துறை ஒரு சமூகத்தின் நான்கு முக்கிய மான தூண்களில் ஒன்றாகும். அரசியல் துறை என்பது ஆய்வு செய்யப்பட்டு பயிற்சி பெற வேண்டிய ஒரு துறை. பொதுமக்களின் ஒப்பு தலுடன் அரசியல் துறையில் நுழைந்த பிறகு, ஒருவர் தனது திறன்கள், திறமைகள் மற்றும் நிபுணத்துவத்தை வளர்த்துக் கொள்ளவேண் டும். இது பத்திரிகைத் துறைக்கும் பொருந் தும்.
பத்திரிகையாளர்கள் பங்களித்தால், அரசாங் கம் எதிர்பார்த்தபடி முன்னேற முடியும். வெளிநாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி கள், பட்டப்படிப்புகள் ஊடகவியலார்க ளுக்கு வழங்கப்படும். அதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்து டன், அடுத்த ஆண்டு ஊடகவியலாளர்களுக் கான காப்பீட்டுத் திட்டத்தை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ம)



# ரணிலின் கைது திட்டமிட்ட செயலே

## ரவூப் ஹக்கீம் கொதிப்பு

**கொழும்பு, ஓக.24**
**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்ட சம்பவம் முன்கூட்டியே திட்ட மிடப்பட்ட செயலாகும். அதனாலே அலைவரி சையாளர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவார் என ஏற்கனவே அறிவித்திருந் தார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**
நாடாளுமன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கைதுசெய்யப்படுவது யூடியூப் அலைவரிசையா ளர் ஒருவர் அறிந்துள்ளார். அதிகாரத்தில் இருப் பவர்கள்தான் அவருக்கு சில துப்புகளைக் கொடுத்திருக்கலாம். இதுதானா அரசாங்கத்தின் புதிய கலாசாரம்.
நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவரை வாக்கு மூலம் பெற்றுக்கொள்ள அழைத்து, பின்னர் கைதுசெய்வது முறையான நடவடிக்கையல்ல. அவருக்கு எதிராக பீ அறிக்கை தாக்கல் செய்தி ருக்கலாம் - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 23.08.2025 | தினம் சனிக்கிழமை | வெற்றி வாரம் 0638
DLB | ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 2 2 8 8 5 4

**Super Ball** DLB
திகதி 23.08.2025 | தினம் சனிக்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2904 | ஆங்கில எழுத்து I | வெற்றி இலக்கம் 02 23 28 72

**சனிதா** DLB
திகதி 23.08.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கம் 37 44 48 71 | வெற்றி வாரம் 5065

**SASIRI** DLB
திகதி 23.08.2025 | தினம் சனிக்கிழமை
வெற்றி வாரம் 0754 | வெற்றி இலக்கம் 13 17 39

**லக்ன ராசி** DLB
திகதி 23.08.2025 | தினம் சனிக்கிழமை
ரிஷபம் | வெற்றி இலக்கம் 05 06 31 51 | சீட்டிழுப்பு வாரம் 4616

**KAPRUKA** DLB
திகதி 23.08.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து T | சுப்பர் இலக்கம் 31 | வெற்றி இலக்கம் 43 48 62 64 | வெற்றி வாரம் 2080

**அத கோடிபதி** DLB
திகதி 23.08.2025 | தினம் சனிக்கிழமை
ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கம் 17 21 22 38 | வெற்றி வாரம் 2730



# பழிவாங்கல்களைத் தவிர வேறு நடவடிக்கையில்லை

## மஹிந்த காட்டம்

கொழும்பு, ஓக.24
அரசியல் பழிவாங்கல்களைத்தவிர அரசாங்கத்தால் வேறு எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை என ரணில் விக்கிரமசிங்கவைப் பார்வையிட் டதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் புரிதலைக் கொண்டுள்ளனர். இந்த நடவடிக் கைகள் பழிவாங்கும் செயல்களைத்தவிர வேறொன்றும் இல்லை. மக்கள் அரசியல் தலைவர்களைத் தொடர்ந்து ஆதரித்து வருகின்றனர். நாம் மக்களை நேசிக்கிறோம். அதனால்தான் மக்கள் நம்மை நேசிக்கிறார்கள் - என் றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகக் கிண்ண சதுரங்கம்

# இணுவில் மாணவிக்கு வெண்கலப்பதக்கம்!

யாழ்ப்பாணம், ஓக.24

ஜார்யியாவில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற உலகக் கிண்ண சதுரங்கப் போட்டியில் 8 - 12 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இலங்கை சார்பாக பங்குபற்றிய இணுவிலைச் சேர்ந்த மாணவி கஜிஷனா தர்ஷன் வெண்கலப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் இறுதிப்போட்டியில் இந்திய வீரரை 2:0 என்றவாறு வீழ்த்தி வெற்றிபெற்றுள்ளார். இவரின் இந்தச் சாதனையைப் பாராட்டி விளையாட்டு அமைச்சின் செயலாளர் மற்றும் இலங்கைச் சதுரங்க சம்மேளனத்தின் தலைவரினால் ஊக்குவிப்புத் தொகையாக ரூபா ஒரு இலட்சம் வழங்கப்பட்டது.

இதேவேளை கஜகஸ்தான் நாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக இளையோர்களுக்கான சம்பியன் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பை கஜிஷனா பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25)

கிளிநொச்சி மருத்துவமனையின்

# பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குக

**கிளிநொச்சி, ஓக.24**

**கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனை வளாகத்தில் சுமார் 5 ஆயிரத்து 300 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்துவைக்கப்பட்ட பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவை உடனடியாக இயங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நோயாளர் நலன்புரிச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

மருத்துவமனை வளாகத்தில் நேற்றுமுன்தினம் மேற்கொண்ட ஊடக சந்திப்பிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதுதொடர்பாக நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் க.விஜய சேகரன் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனை வளாகத்தில் நெதர்லாந்து அரசினுடைய நிதியொதுக்கீட்டின்கீழ் சகல வசதிகளையும் கொண்ட 160 க்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கான படுக்கை வசதிகளைக்கொண்ட பெண் நோயியல் சிகிச்சைப் பிரிவு திறந்துவைக்கப்பட் டது. அது இன்றுவரை இயங்காதநிலையில் காணப்படுகிறது. இந்தநிலையில் இங்குள்ள சில மருத்துவ உபகரணங்களை வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் திரை மறைவில் மேற்கொள்ளப்பட்டுவருவதாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. எனவே நவீன வசதிகளுடன் கூடிய இந்த பெண் நோயியல் சிகிச்சைப்பிரிவை இயங்கவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-113)




# சாவகச்சேரியில் வீதி விளக்குகள் திருத்தம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 24

சாவகச்சேரி நகரசபை எல்லைப்பரப்புக்குள் உள்ள வீதி விளக்குகளின் மின்குமிழ்கள் மாற்றப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுவருவதாக மின்சாரசபையினர் தெரிவித்துள்ளனர்.


சாவகச்சேரி நகரசபையின் மூன்றாவது அமர்வு சபையின் தலைவர் வே.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இங்கு சுமார் 200க்கு மேற்பட்ட வீதி விளக்குகள் நீண்டகாலமாக பழுதடைந்து ஒளிராது காணப்பட்டன. தற்பொழுது இலங்கை மின்சாரசபையின் ஆளணி உதவியுடன் மின்குமிழ்கள் மாற்றப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுவருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-131-41)

# கூட்டுறவுதின போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ். மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவு சமாசம் நடத்தும் 103ஆவது சர்வதேச சுவட்டுறவுதின விழாவை முன்னிட்டு அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர் பணியாளர்களுக்கான மைதான மட்டப் போட்டிகள் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் அரியாலை சனசமூக நிலைய மைதானத்திலும் சமாச மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. துடுப்பாட்டம், கயிறு இழுத்தல், பேச்சு, கவிதை, பொதுஅறிவு, பாலர் பாடசாலை மாணவர்களுக்கான திருக்குறள், குழுநடனம் ஆகிய போட்டிகளை நடத்த சமாசம் ஏற்பாடு செய்துள்ளது. (ச-41-63)



# மகாஜனமாணவர்கள் தடகளத்தில் புதிய சாதனை

யாழ்ப்பாணம், ஓக.24

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தடகளப் போட்டியில் மகாஜனக் கல்லூரியின் மாணவர்கள் சாதனைபீட்டியுள்ளனர்.

அதன்படி கல்லூரி வீராங்கனை ரி. ஆரதி 16 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் 100 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தில் 17 செக்கன்கள் 4 வினாடிகளில் ஓடிமுடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

அதேபோன்று கல்லூரியின் வீரன் பிரவீன் 14 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் 100 மீற்றர் ஓட்டத்தில் 12.8 செக்கன்களில் ஓடிமுடித்து, 14 வயது ஆண்கள் பிரிவில் சிறந்த சுவட்டு வீரனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (ச-25)

# வீதிகளில் வீசப்படும் வீட்டுக்கழிவுகள்!

## தடுப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 24

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட சில வீதிகளில் பொது மக்கள் தமது வீட்டுக்கழிவுகளை வீதியில் வீசிவிட்டுச் செல்கின்றனர். அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கல்வயல் வட்டாரப் பிரதிநிதி இ.யோகநாதன் சாவகச்சேரி நகரசபையின் அமர்வில் சுட்டிக்காட்டினார்.

மக்கள் தமது வீட்டுக்கழிவுகளை எடுத்துவந்து மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதிகளில் சாதுர்யமாக வீசிவிட்டுச் செல்கின்றனர். குறிப்பாக கல்வயல் பெருங்குளம் வீதி, முத்துமாரியம்மன் பெருங்குளம் பிள்ளையார் ஆலய வீதி, டச்சு வீதியில் மருதடிச்சந்திப்பகுதி, கற்குளி முதலாம் வீதி, கனகம் புளியடிச்சந்தி ஆகிய பகுதிகளிலேயே அதிகளவில் கழிவுப்பொருள்கள் வீசப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

அதற்கமைய குறித்த பகுதிகளில் சி.சி.ரி.வி. கமராக்களை பொருத்தி நடவடிக்கை எடுத்து அதனைத் தடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. (ச-131-41)

# சண்முகதாசன் 'நூற்றாண்டு மனப்பதிவுகள்' நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.24

பொதுவுடமைப்பேரியக்கத்தின் பெருமைமிகு தலைமைத் தோழர் நா.சண்முகதாசனின் 'நூற்றாண்டு மனப்பதிவுகள்' நூல் அறிமுக நிகழ்வு எழுத்தாளர் வி.ரி. இளங்கோவன் தலைமையில் இல 182, கந்தர்மடம் அம்மன் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் நூல் அறிமுக உரையினைத் தோழர் சபா தனுஜன், கருத்துரையினை சட்டத்தரணி சோ.தேவராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்கள் கையளிப்பு



யாழ்ப்பாணப் பொதுநூலகத்தின் சிறுவர் பகுதியில் சிறுவர்களுக்கான தமிழ்ச் சொல்லுருவாக் கம், மற்றும் ஆங்கிலக் கதை சொல்லும் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. நிகழ்வில் சிறுவர் பகுதிக்குத் தொடர்ச்சியாகவரும் சிறுவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு நூல்கள் வழங் கிவைக்கப்பட்டன. (ச-25.66)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி செலுத்தும் ஆராதனையும்



தோற்றம் 30 . 05 . 2003

மறைவு 11 . 07 . 2025

கடந்த 11.07.2025 வெள்ளிக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது மகன்

**அமரர் ராகுலன் ஜோன்டினோஷன் (நோவா)**

அவர்களின் 45ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி செலுத்தும் ஆராதனை இன்று (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுவதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மதியபோசன நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தியறிந்து நாம் துயருற்றிருந்த வேளையில் புலம்பெயர் நாட்டிலிருந்து வருகை தந்த எனது அன்புச் சகோதரன் (ஸ்ரீ) நேரில் வந்து ஆறுதல் கூறிய அவர்களுக்கும், தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், மலர் கொத்து சாத்தியவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர் , நண்பர்கள், இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா,
தங்கை மற்றும் உறவினர்கள்.

வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(CS/59219) J-1



## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.24

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் உதவித்திட்டங்கள் செயற்படுத்தலும் பாராட்டு விழாவும் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் ச.ஜயந்தன் தலைமையில் பிரதேசசபையின் தலைமைக் காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவில் மாணவர்களுக்கான கல்விசார் ஊக்குவிப்புகள் வழங்கல், மாற்றுத்திறனாளிகளின் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், உள்ளூர் எழுத்தாளர் கௌரவிப்பு, சுகாதாரப் பொதிகள் வழங்கல், வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள் கௌரவிப்பு என்பன இடம் பெற்றன. (ச-25,27)



43 வருடங்களாக தமிழ் ஆங்கில எழுத்துத் துறையில் பயணிக்கும் மூத்த எழுத்தாளர் வெற்றிவேல் சக்திவேலுக்கு சிறந்த எழுத்தாளர்களுக்கான கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். வலிகாமம் மேற்குப் பிரதேசசபையில் அண்மையில் நடைபெற்ற சுகாதாரப் பொதி வழங்கும் உதவித்திட்டம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் கவிதா உதயகுமார் கேடயத்தை வழங்கினார். வலிகாமம் மேற்குப் பிரதேசசபை தவிசாளர் ச.ஜயந்தன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (எ-25)



## பெண்களுக்கான கபடிப்போட்டி

யாழ்ப்பாணம், ஓக.24

தெல்லிப்பழைப் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கபடிப்போட்டி இளவாலையிலுள்ள மோகன் ஞாபகார்த்த உள்ளக அரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இறுதிப்போட்டியில் வயாவிளான் ஜீவ ஒளி இளைஞர் கழக அணியை எதிர்த்துப் போட்டியிட்ட கருகம்பனை இந்து இளைஞர் கழக அணி 45:23 என்ற கணக்கில் வெற்றி வாகை சூடியது. (ச-41-27)





## விசுவமடு ப.நோ.கூ. சங்கத்தை பார்வையிட்ட வர்த்தக அமைச்சர்

முல்லைத்தீவு, ஓக.24

முல்லைத்தீவு வள்ளுவர்புரம் பகுதியில் உள்ள விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நவீன அரிசி ஆலையை வர்த்தகம், வாணிபம் மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க கடந்த செவ்வாய்க்கிழமை பார்வையிட்டார். அமைச்சருடன் கூட்டுறவுப் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க ,நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

குறித்த அரிசி ஆலையின் தேவைகள் தொடர்பாக அமைச்சர் கேட்டறிந்து கொண்டார். இதன்போது முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் மாவட்டத்தின் கூட்டுறவுத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான மனுவொன்றையும் அமைச்சரிடம் கையளித்திருந்தனர். (ச-25, 113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கிலம் கற்றுத்தரப்படும்**

வீடு வந்து தரம் 6 முதல் அனைத்து வகுப்பினருக்கும் ஆங்கிலம் பேச - எழுத - வாசிக்க சிறப்பான முறையில் இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் ஒருவரால் யாழ்நகர சுற்றாடலில் கற்றுத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:
**077 334 2392**

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்ப, 49 வயது திருமணமாகாத மணமகனுக்குத் திருமணமாகாத நற்குணமுள்ள தகுந்த மணமகள் தேவை.

(CS/59209) J-1

தொடர்பு:- **074 242 9737**

**காணி விற்பனைக்கு**

உடுவில் மகளிர் கல்லூரிக்கும், மானிப்பாய் பிரதான வீதிக்கும், மிக அண்மையில் அமைந்துள்ள ஏறத்தாழ 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. காணி வாங்க விரும்புவோர் மட்டும் விற்பனையாளருடன் நேரடித்தொடர்பு கொள்ளவும்

(CR 45905) E

தொடர்பு: **077 726 0194**

**வீடு/காணி விற்பனைக்கு**

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் வீடு வளவு விற்பனைக்கு உண்டு

(CR 45881) E

தொடர்புகளுக்கு: குகநேசன்
07904 074 740 (UK)
0044 7904 074 740 (Whatsapp)

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ் பிறவுண் வீதியில் இல 17/1. 10 அறைகள், 3 குளியலறை. 2 சமையலறை. 2 வரவேற்பறையுடன் கூடிய 2 மாடி வீடு வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் (Companies), குடும்பங்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:
077 807 2985 / 077 710 8101

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

தனியார் கல்வி நிறுவனம். சங்கானை
ஆண்டு 10ல் இருந்து எம்மிடம் சிறு குழுக்களாக கல்வி கற்று O/L பரீட்சையில் 9A ஐப் பெற்றுக்கொள்ளுங்கள்.
குபேரன் கட்டடம் சங்கானை

**Tel- 077 675 1649**

## விசேட செயற்பாடு

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ்.பொதுசன நூலகம் அமெரிக்கன் கோணர் நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தும் விசேட செயற்பாடு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. (ச-41)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**இடபம்:** அனுகூலமான நாள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. உங்களுடைய பணிகளில் வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம்தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத் துணைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.


**மகரம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஆதரவு கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்காது.

**கும்பம்:** வியாபாரத்தைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் ஏற்படுவதற்கில்லை. தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நன்று. அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்

**மீனம்:** இன்று எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சற்று சோர்வு உண்டாகும்.

# பிறந்த எண் பலன்கள்

ஜோதிட ரீதியாகப் பார்க்கும்பொழுது ஒவ்வொரு எண்ணில் பிறந்தவர்களுக்கும் ஒவ்வொரு குணம் உண்டு. அந்தந்த எண்ணிற்கேற்ப அவரவரின் இயல்புகளும் அமைந்திருக்கும். ஒன்றாம் எண்ணிலிருந்து 31ஆம் எண்வரை எந்த எண்ணில் பிறந்திருந்தாலும் அதன் கூட்டுத் தொகையானது ஒன்றிலிருந்து 9 வரையே இருக்கும்.




ஒன்பது எண்களில் 3ஆம் எண்ணுக்குத் தனிச்சிறப்பு உண்டு. தேவகுருவான பிரகஸ்பதிக்கு உரியது. எப்போதுமே அடுத்தவர்க்கு நல்லது மட்டுமே செய்பவர்கள் இவர்கள்தான். தன்னை நம்பி வருவோர்க்கு நிச்சயம் உதவி செய்வார்கள். தங்களை மற்றவர்கள் மதிக்கவேண்டும், தங்களது ஆலோசனைகளையும் கேட்கவேண்டும் என்று மட்டும் மிகவும் எதிர்பார்ப்பார்கள். தங்களது உடை விஷயத்திலும், தங்களை அழகுபடுத்திக்கொள்ளும் விஷயத்திலும் ஆர்வமாக இருக்கமாட்டார்கள். மானத்தை மறைப்பதற்காக உடை அணிகிறோம் என்று மட்டும் நினைப்பார்கள்.

அடுத்தவர்களிடம் உதவி கேட்டுச் செல்லமாட்டார்கள். சுயகௌரவம் பார்ப்பது இவர்களது குறைபாடாகும். இதனாலேயே பல நல்ல வாய்ப்புகளை இவர்கள் வாழ்க்கையில் இழந்திருப்பார்கள்.

இவர்கள் பழைய சாத்திரங்கள், பழைய பழக்கங்கள் ஆகியவற்றின்மீது மிகவும் மதிப்பும், மரியாதையும் கொண்டவர்கள். எனவே, கட்டுப்பாடுகளை மீறப் பயப்படுவார்கள். பெயர் கெட்டுவிடுமோ என்று பெரிதும் அஞ்சுவார்கள். உயிருக்குச் சமமாக கௌரவத்தைக் காப்பாற்றுவார்கள்.

இவர்களின் பேச்சில் மனச்சாட்சி, விதி, நேர்மை, பாவம் போன்ற வார்த்தைகளை அடிக்கடிப் பயன்படுத்துவார்கள். இவர்கள் சுதந்திரமாக வாழவே பிரியப்படுவார்கள். அதிகாரத்துக்கும், ஆணவத்துக்கும் அடிபணிய மறுப்பார்கள். சில சமயங்களில் ஆவேசமாகவும் எதிர்ப்பார்கள். சொத்துகள் விஷயத்திலும் விட்டுக் கொடுக்கும் குணம் அதிகம் உண்டு. "என் தம்பிதானே வைத்துக் கொள்ளப் போகிறான், வைத்துக் கொள்ளட்டும்." என்று எதார்த்தமாக நினைப்பார்கள். இவர்கள் தீனிப் பிரியர்கள்.

குரு ஆதிக்கம் நன்கு அமையப்பெற்றவர்கள். அன்பிலும், பக்தியிலும், சிறந்தவர்கள். ஏதாவது ஒரு துறையில் தனித் திறமையைக் காட்டுவார்கள்.

நல்லவர்களிடத்தில் சுமுகமாக பழகும் குணமும், அத்துமீறி நடப்பவர்களைக் கண்டிக்கத்தக்க தைரியமும் உடையவர்கள். தன்னைச் சார்ந்தவர்களாக இருந்தால் தவறுகளை மன்னிக்கும் சுபாவம் இருக்கும். எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அதைச் செய்துமுடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். மிகவும் சுறுசுறுப்பும், எதையும் எளிதில் கிரகிக்கக்கூடிய தன்மையும் இவர்களுக்கு உண்டு. சுயநலம் பாராமல் உதவி செய்யக்கூடிய குணமிருப்பதால், இவர்களிடம் எதையும் எளிதில் சாதித்துக் கொள்ளலாம்.

உண்மையே பேசி நீதி நியாயத்தை வாழ்வில் கடைப்பிடிப்பார்கள். பெரிய கருத்தரங்குகளிலும் மணிக்கணக்கில்பேசக்கூடிய திறமை இருக்கும். எவ்வளவு வேகமாகப் பேசினாலும் சொற்கள் அழுத்தம் திருத்தமாக வந்து விழும்.

இவர்களிடம் இருந்து வரக்கூடிய வார்த்தைகள் வில்லில் இருந்து விடுபடும் அம்பு போல கடுமையானதாக இருக்கும். முன் கோபக்காரர்கள். ஆனாலும் கோபம் தணிந்து பின் உண்மையை உணர்ந்துகொள்வார்கள். எதையும் மனதில் வைத்துக்கொள்ளாமல் கள்ளம் கபடமின்றி உள்ளன்புடன் அனைவரிடமும் மனம் திறந்து பேசுவதால், இவர்களிடம் இரகசியங்கள் தங்காது.

**குடும்ப வாழ்க்கை:** மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் குடும்ப வாழ்வில் எவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனை சுலபமாக சமாளித்து விடுவார்கள். காதல் விவகாரங்களில் ஈடுபட்டாலும் ஒரு சிலருக்கு மட்டுமே காதல் திருமணம் கைகூடும். பலருக்கு பெரியவர்கள் பார்த்து நிச்சயிக்கும் திருமணமே நடைபெறும்.

இவர்களுக்கு அமையும் வாழ்க்கைத் துணை நல்ல தெய்வ நம்பிக்கை மிக்கவராகவும், கணவன், மனைவி இருவரும் விட்டுக் கொடுத்து செல்லக்கூடிய மனப்பக்குவம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். ஒருவரின் வாழ்க்கைக்கு மற்றொருவர் ஏணியாக இருப்பார்கள் என்று கூறினால் மிகையாகாது.

**பொருளாதாரம்:** மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் பெரும்பாலும் செல்வந்தர்களாகவே இருப்பார்கள். எதிர்பாராத வகையில் திடீர் தனவரவுகளும் கிடைக்கப் பெறுவார்கள். சுகவாழ்வு, சொகுசு வாழ்விற்கு பஞ்சம் இருக்காது. வாழ்க்கையில் பணமுடை இருக்காது. பல்வேறு பொதுக்காரியங்களுக்கும், ஆன்மிக, தெய்வீக காரியங்களுக்காகவும் செலவு செய்யக்கூடிய வாய்ப்பு அமையும். தொழில்

**அதிர்ஷ்ட திகதி,1,10,19,28, 3,12,21,30 அதிர்ஷ்ட நிறம் - பொன் நிறம், மஞ்சள் அதிர்ஷ்ட திசை -**
**வடக்கு அதிர்ஷ்ட கிழமை -**
**வியாழன் அதிர்ஷ்ட கல் புஷ்பராகம்**
**அதிர்ஷ்ட தெய்வம் - தட்சிணாமூர்த்தி**

## தெல்லிப்பழை துர்க்காதேவி கொடியேற்றம் நாளை

யாழ்ப்பாணம், ஓக.24

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை திருமுறைத் திருவிழாவும், 28ஆம் திகதி வியாழக்கிழமை முத்தேவியர் திருவிழாவும், 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை தங்கரதத் திருவிழாவும், 30ஆம் திகதி சனிக்கிழமை மஞ்சத் திருவிழாவும், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மாலை 5மணிக்கு கைலாசவாகனத் திருவிழாவும், 3ஆம் திகதி புதன்கிழமை காலை 11மணிக்கு பட்டுக்குடைத் திருவிழாவும், மாலை 4மணிக்கு சப்பறத் திருவிழாவும், 4ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை முகத்தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-41-159)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புதிய ஆலய திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஓக.24

கச்சாய் செபமாலை அன்னையின் புதிய ஆலயத் திறப்புவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு இடம்பெறவுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட அன்னையின் ஆலயம் யாழ். ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் அர்ச்சிக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டு தொடர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ச-41-159)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# ஒரு கைதும், ஓராயிரம் செய்திகளும்!

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைதுசெய்யப் பட்டிருக்கின்றார் இலங்கையின் முன்னாள் நிறைவேற்றதிகார ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க. ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பேற்ற நாள்முதல் ஊழலுக்கு எதிரான செயற்றிட்டங்களில் கடந்த அரசாங்கங்களையும் விட ஈடுபாடு காட்டிவருகின்றது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனினும், இதுவரை பெருந்தலைகள் எவரையும் அநுர அரசாங்கம் சீண்டியதில்லை. இதற்காக அநுர அரசாங்கத்தின்மீது பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், ரணிலைக் கைதுசெய்து நீதிமன்றப் படியேற்றி பிணை வழங்க மறுத்து விளக்கமறியலில் வைக்கக்கூடிய வழக்கைத் தொடுத்து விளக்கமறியல் உத்தரவு பெற்று விலங்குமாட்டிச் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றியிருக்கின்றது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்.

இதன்மூலம் பெருந்தலைகளைக் கைதுசெய்வது தமக்கொன்றும் பெரிய விடயமல்ல. அனைத்துக்கும் இதுவொரு ஆரம்பம்தான் என்ற செய்தி சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கின்றது. இலங்கை போன்றதொரு இனவாதம் தழைத்தோங்கிய நாட்டில், இவ்வாறான செயல்களைச் செய்வதற்கு அசாத்தியத் துணிவும் 'தெளிந்த பார்வையும்' வளைக்கமுடியாத கொள்கையும் வேண்டும். அது அநுர அரசாங்கத்திடம் தாராளமாகவே இருக்கின்றது என்பதையும்தான் ரணிலின் இந்தக் கைது நடவடிக்கை வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஆனால், இப்போதுதான் ஜனாதிபதி அநுரவுக்கும் தேசிய மக்கள் சக்தியினருக்கும் உண்மையான சவால் ஆரம்பிக்கின்றது. முன்னாள் ஜனாதிபதியின் கைது சிங்கள பௌத்த மேட்டுக்குடித் தலைவர்களை ஓரணியில் நிறுத்தும் வல்லமை பெற்றது. ரணில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றப் படியேற்றப் பட்டதும் நீதிமன்றத்துக்கு ஓடோடிச் சென்ற 'படையணி' இதற்கு ஆகச் சிறந்த உதாரணமாக அமைந்துள்ளது. மாற்றுக்கருத்துகளால் தமக்குள் பிரிவுபட்டிருந்த அத்தனை பேரும் இனிவரும் நாள்களில் அநுரவின் அரசாங்கத்தைப் பொது எதிரியாகக்கொண்டு இயங்குவார்கள். சிங்கள மக்கள் இனவாதத்தாலும், மதவாதத்தாலும் உரமேற்றப் பட்டுத் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஒன்று திரட்டப் படுவார்கள். எனவேதான், ரணிலின் கைது அநுரவின் அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு கத்திமுனைநடை.


ரணிலையும் விட பெருத்த ஊழல் பெருச்சாளிகள் ராஜபக்சாக்கள்தான். இதை ஜனாதிபதி அநுரவும் அவர் தலைமையிலான அணியினரும் நாட்டு மக்களிடத்தில் பலமுறை கூறியிருக்கின்றனர். எனவே, ரணிலின் கைது ஒரு நல்ல ஆரம்பமே அன்றி, அதுவொரு திருப்திப்படுத்தல் புள்ளியல்ல. ஊழல் மோசடிகளால் பறிக்கப்பட்ட தமது பணத்தை மீளவும் பத்திரமாக மீட்டுத்தருமாறு மக்கள் அநுர அரசாங்கத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். அந்த நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படவேண்டும். அதற்கான செயற்பாடுகள் என்று முழுமை பெறுகின்றனவோ அன்றுதான் இந்தத் தீவில் 'பொருளாதார' சுபீட்சம் மலரும்.

நேர்மையாகக் கூறவேண்டுமெனில், தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் ஈஸ்டர் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் நியாயமான விசாரணைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை 'சிங்கள மக்களிடத்தில்' ஏற்பட்டிருக்கின்றது. இதே எண்ணத்தை தமிழர்களின் மனங்களிலும் மலர்விக்கவேண்டியது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

## நாளொரு நல்வார்த்தை

கல்வியின் பயன் எதையும் கோபப்படாமலும், தன்னம்பிக்கையை இழக்காமலும் செவிசாய்க்கும் திறனே!

ரொபேர்ட் பிராஸ்ட்




# சட்டம் சமமாகவே செயற்படுத்தப்படும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.24

**சமகால அரசாங்கம் சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய்வதால் பதவியைப் பொருட்படுத்தாமல் சட்டம் அனைவருக்கும் சமமாக செயற்படுத்தப்படும் எனப் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ்மா அதிபரா? பிரதிப் பொலிஸ்மா அதிபரா? முன்னாள் ஜனாதிபதியா? என பதவிகளைப் பார்த்து எவருக்கும் எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. எவரேனும் தவறு செய்திருந்தால், அவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்தத் தயங்கப் போவதில்லை. 8 முதல் 10 மாத காலத்திற்குள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்டியுள்ளார். நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட தற்போதைய அரசாங்கம் செயற்பட்டுவருகிறது - என்றார். (ச-இ)

# மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.24

அநுராதபுரத்தில் மெகிச்சாவவெவபிட்டியப் பிரதேசத்தில் மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை நடந்துள்ளது.

மாடுகளை மேய்ப்பதற்காக வயலை நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளை இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (ச-இ)





# பொரளையில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஓக.24

பொரளை, காதர் நானாவத்தப் பகுதியில் நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த துப்பாக்கிச்சூட்டில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-இ)

# இலங்கை யுவதி பிரிட்டனில் கொலை

லண்டன், ஓக.24

பிரித்தானியாவில் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் கொலைசெய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கார்டிப் பகுதியில் வசிக்கும் நிரோதா கல்பானி நிவூன் ஹெல்ல (வயது-32) என்ற பெண்ணே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் 37 வயதான மற்றுமொரு இலங்கையர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ச-இ)

# டிஜிற்றல் ஒப்பந்தத்துக்கெதிராக அடிப்படை உரிமை மனுதாக்கல்



கொழும்பு, ஓக.24

மக்களுக்கு டிஜிற்றல் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக்கக் கோரி முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்துள்ளார்.

குறித்த மனுவில் ஜனாதிபதி, பிரதமர் ஹரிணி அமரசூரிய, டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் மற்றும் அமைச்சரவை உள்ளிட 31 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்தின் கொள்முதல் செயல்முறைக்கு மாறாக, திட்டத்தை இந்திய நிறுவனத்துக்கு மாற்றுவதற்கான அரசாங்கத்தின் முடிவு தன்னிச்சையானது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - ஆவணி 09
25.08.2025
சுபநேரம் : 12.05 - 10.35
ராகுகாலம் : 07.35 - 09.05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு

கச்சான் பிடுங்கும், உடைக்கும், மற்றும் பழச்சாறு பதனிடும் இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு

(CS 59221) E

077 233 6267 / 077 624 4796

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் சொந்த பாவிப்பில் உள்ள Pleasure மோட்டார் சைக்கில் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 8849 677

(CS 38657) A


# போராட்டத்துக்கு வலுச்சேருங்கள்

## பருத்தித்துறையில் துண்டுப்பிரசுரம்

யாழ்ப்பாணம், ஓக.24

பருத்தித்துறை நகரின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் இராணுவ முகாம்களை அகற்ற வலியுறுத்தி நாளை திங்கட்கிழமை பருத்தித்துறையில் முன்னெடுக்கப்படவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஆதரவு கோரும் வகையில் பருத்தித்துறை நகர் வர்த்தகர்களிடம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கும் செயற்பாடு நேற்று முன்தினம் மாலை முன்னெ டுக்கப்பட்டது. நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகப் பகுதியில் இருந்து குறித்த கவனவீர்ப்புப் பேரணி ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் காலையில் குறித்த நேரத்திற்கு வர்த்தக நிலையங்களை மூடி போராட்டத்தில் பங்கேற்குமாறு கோரித் துண்டுப்பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

இதன்போது பருத்தித்துறை நகரபிதா வி. டக்ளஸ்போல் தலைமையில் நகரசபை உறுப்பினர்கள் வர்த்தக நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். (ச-100)



காணி விற்பனைக்கு

**இடம்:** ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் 'நறுவிலியடியும் சூடுவிந்தனும்' எனும் பெயர் கொண்ட காணி பங்குக்கிணற்றுடனும் பழைய வீட்டுடனும் விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு 05, குளி 01.23

கிராம சேவகர் பிரிவு: கொக்குவில் தென்மேற்கு (J127)

பிரதேச செயலாளர் பிரிவு : நல்லூர்

மாவட்டம்: யாழ்ப்பாணம்

**தொடர்புகளுக்கு:**

அருட்பணி ஞானகாருண்யன்,
தூய திருத்துவ ஆலயம், கொக்குவில்.

077 900 3585, 076 7414 448

மணமகன் தேவை


ஜேர்மனியில் பிறந்து இங்கிலாந்தில் வசிக்கும் இலங்கை தமிழ் பூர்வீக, வெள்ளை நிறமுடைய, அழகிய, 29 வயதான பட்டதாரி மணமகளிற்கு மேற்கத்தேய நாட்டில் பெற்றோர்களுடன் வசிக்கும் உயரமான, பட்டதாரி மணமகனை தேடுகிறோம். வரன் இலங்கை அல்லது இந்திய தமிழ் அல்லது சிங்கள கலப்பினராக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(CS 58216) A

074 0800 969/ 076 629 9311

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 07 . 1950



மறைவு 22 . 08 . 2025

## புஸ்பவதி விஜயரட்ணம்

**(ஓய்வுபெற்ற மருந்தாளர்)**

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பவதி விஜயரட்ணம் 22.08.2025 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம் - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் விஜயரட்ணத்தின் அன்பு மனைவியும், மதனன் (முகாமையாளர் - BOC), கிருஷ்யா (இலங்கை வங்கி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரேணுகா, கோகிலன் (வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரன், கணேஸ்வரன், மகேஸ்வரன், வசந்தாவதி மற்றும் நகுலேஸ்வரன், ஈஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தியாகலிங்கம், துரைரட்ணம், இராசரெட்ணம் மற்றும் லோகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, திலகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனிகா, ஆத்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2025) ஞாயிற்றுக் கிழமை இல 5/1 புறூடி ஒழுங்கையில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


077 778 1208
077 642 6946

தகவல்
குடும்பத்தினர்

(CS 59221) E

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1939



மறைவு 23 . 08 . 2025

## சுப்பையா மகாலிங்கம் (மயில்வாகனம்)

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா மகாலிங்கம் நேற்று (23.08.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா -முத்துப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் சகோதரனும், காலஞ்சென்ற பசுபதி (ஆசிரியர்) அவர்களின் மைத்துனரும், கிரிஜா (கோண்டாவில்), வனஜா (சுவிஸ்), அனுசா (டென்மார்க்), தனுஜா (கோண்டாவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்வேஸ்வரன் (நல்லூர் பிரதேசசபை முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்), உதயகுமார் (சுவிஸ்), சிவதாசன் (டென்மார்க்), ரமேஸ்குமார் (இலங்கை வங்கி, திருநெல்வேலி) ஆகியோரின் மாமனாரும், கார்த்திகன் (A/L மாணவர் யாழ் கோண்டாவில் இராமகிருஸ்ணமகாவித்தியாலயம்), பிரணவன், பிரவிந், அபிநயா (சுவிஸ்), தாரகன், ஆரணன், மாதுளன் (டென்மார்க்), துதியகன் (யாழ் கோண்டாவில் இராமகிருஸ்ணமகாவித்தியாலயம்), கவிநயா, காவியா (கலைவாணி முன்பளி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கலைவாணி வாழ் மக்கள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

**இ.சர்வேஸ்வரன் - 074 141 9386**

**[illegible] - 077 498 6944**

(CS/59210) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306 D12
நடாத்தும்



கார்னிவல்
லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு
நிதி திரட்டுவதற்காக
சர்வதேச லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306 D12 நடாத்தும்
கார்னிவல் (CARNIVAL)

இடம் : சங்கிலியன் பூங்கா,
நல்லூர்.
அனைவரின் வேண்டுகோளிற்கிணங்க
மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.
நேரம் : மாலை 3.00

லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர்
தொடர்புகளுக்கு :
(Lions Eye Hospital Financial Contributors to Contact)
Lion. Dr K.M.Pathmanathan
Inaugural Distrct Governor 306 D12
077 732 3702
district306d12@gmail.com
We Serve With Humanity

## வீடு/காணி விற்பனைக்கு
உடுவில் மகளிர் கல்லூரிக்கு
அருகில் வீடு வளவு
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: குகநேசன்
07904 074 740 (UK)
0044 7904 074 740 (Whatsapp)

## வீடு வாடகைக்கு தேவை
அரச ஊழியர் ஒருவருக்கு
சுன்னாகம், மல்லாகம், ஏழாலை
மற்றும் தெல்லிப்பளையை அண்டிய
இடத்தில் அறை / அனெக்ஸ்
or சிறிய வீடு தேவை
தொடர்பு: 074 080 0969

## தொழிநுட்ப உத்தியோகத்தர் தேவை
கோண்டாவில் குமரகோட்டம்
ஞான வைரவர் ஆலயத்திற்கு
கட்டிட புனரமைப்பு
வேலைகள் மேற்பார்வைக்கு
ஆள் தேவை
தொடர்பு: 077 390 8561

## Motor Cycle Sale



புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
Royal Enfield Model 350 Bullet
(Black with gold stripe) 350
Classic Metallic Silver Motorcycle
for Sale
தொடர்புகளுக்கு:
076 708 6556

# இரத்தான முகாம்

யாழ்ப்பாணம், ஓக.24

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு அருள்மிகு செல்வச் சந்நிதி ஆலயத் தேர்த்திருவிழாவை முன்னிட்டு சிறப்பு இரத்ததான முகாம் செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு அருகில் ஆற்றங்கரை வீதியில் அமைந்துள்ள மாதர் சங்க மண்டபத்தில் அடுத்தமாதம் 6 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கம் மற்றும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கலாமன்றம் ஆகியன இணைந்து நடத்தவுள்ள குருதிக்கொடை முகாமில் பங்கேற்று குருதிக் கொடை வழங்க விரும்பு வோர் 0779911131 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முன்பதிவு செய்யுமாறு வல்வெட்டித் துறை இரத்ததானச் சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

(ச-25,100)

# கும்பாபிஷேகம்

சுன்னாகம் தெற்கு அருள்மிகு ஸ்ரீசிவபூதராயர் தேவஸ்தான கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குரு கிரியாகலா ஜோதி சிவஸ்ரீ சிவசோம தீபதர்சன சிவாச்சாரியார் தலைமையில் கும்பாபிஷேகம் இடம்பெறும் எதிர்வரும் 27ஆம் திகதி கர்மாரம்பமும், மறுநாள் 28ஆம் திகதி எண்ணெய்க்காப்புச் சாத்தலும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச-25)

# மரண அறிவித்தல்

## சிவனேஸ்வரன் (பிற்றிங் சிவா)



தோற்றம்
23.07.1968

மறைவு
22.08.2025

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்படமாகவும், தாவளை இயற்றாலை, கொடிகாமத்தை தற்காலிக வசிப்பிடமாக கொண்ட சிவனேஸ்வரன் (பிற்றிங் சிவா) நேற்றுமுன்தினம் (22.08.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - கமலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பரமநாதன் மற்றும் - இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சாந்தமலரின் அன்புக் கணவரும், பவதாரணி, பிரசன் (பிரான்ஸ்), சிபிராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனீஸ்வரனின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான இலங்கேஸ்வரன், கலாநிதி மற்றும் கருணாநிதி, ஜெகதீஸ்வரன் (மல்லி) சகோதரரும், சண்முகராசா (தாவளை இயற்றாலை), சத்தியானந்தன் (பிரான்ஸ்), சண்முக வடிவேல் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் (ஜெயா) மற்றும் சற்குணராசா (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவளை இயற்றாலை தச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தாவளை,
இயற்றாலை, கொடிகாமம்.

(CS/59209) J-1

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டுகள் பத்தொன்பது

**அமரர் சுப்பிரமணியம் பசுபதி**

தோற்றம் 29.11.1935 — மறைவு 26.08.2006

திதி: துதியை (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை



ஆண்டுகள் பத்தொன்பது
ஆனதுவோ அப்பா!
நீங்கள் அருகிருந்தெம்
மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய்
உங்கள் வார்த்தைகள்
எம்மோடு என்றும் வாழும்
வணங்குகின்றோம்.

குடும்பத்தினர்.

'பசுபதீயம்'
கலாசாலை வீதி.



## வேலைவாய்ப்பு

மின்பொருள் விற்பனை நிலையமொன்றிற்கு
வேலையாள் தேவை. (பெண்)

- Billing and Accounts
- வயதெல்லை 21 - 45 இடைப்பட்டவர்.
- யாழ் மாநகர சபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
- A/L 3 பாட சித்தி விரும்பத்தக்கது.

**075 590 4041**

760A, 760B, K.K.S வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்



## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்

மண்ணில் 23 • 11 • 1964



விண்ணில் 21 • 08 • 2025

### திருமதி அனிற்றா கலையரசி அன்ரன் செல்வகுமார்

**(இளைப்பாறிய ஆசிரியை யா/இணுவில் மத்திய கல்லூரி)**

தாவடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அனிற்றா கலையரசி அன்ரன் செல்வகுமார் அவர்கள் கடந்த (21.08.2025) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் கா.தம்பிராசா மற்றும் காலஞ்சென்ற அன்னலக்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நா.பேரின்பரட்ணம் - மேரி ஜோசேப்பின் தம்பதியரின் அன்பு மருமகளும், பே.அன்ரன் செல்வகுமார் அவர்களின் அன்பு மனைவியும், செல்வன் அ.போல் காருண்யன் (Marketing Executive SLIC), அ.பிறின்சி கிருபிகா (Undergraduate SUSL) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற த.பாலஸ்காந்தன் மற்றும் த.சிவபாலன் (கனடா), த.கருணபாலன் (கனடா), த.கலாரஜனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இன்பராணி யேசுதாசன் ஜெனரிக் அழகேந்திரன், ஆஞ்சலோ ஜெயசீலன் மற்றும் வாசுகி சிவபாலன் (கனடா), சுகி கருணபாலன் (கனடா), ரட்ணராஜா, வசந்தராணி, அன்ரனிற்றா வத்சலா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிஆராதனை நாளை (25.08.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இரங்கல் நல்லடக்கத்துக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்
என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்

வன்னியசிங்கம் வீதி,
தாவடி.

தகவல்: குடும்பத்தினர்
077 607 7142

(CS/59213) J-1


வடக்கு மாகாணத்தில்

# பணி இணைப்புச் செய்யப்படாத 454 சுகாதார ஊழியர்கள்

**கொழும்பு, ஓக.24**

**வடக்கு மாகாணத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு சுகாதார ஊழியர் (தரம் III) சேவைக்கு முறையாக நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப் பட்ட 454 சுகாதார ஊழியர்கள் இதுவரை பணியிணைப்புச் செய்யப்பட வில்லை. அவர்கள் விரைந்து பணியிணைப்புச் செய்வதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சிடம் அவர் இதனைச் சுட்டிக்காட்டி னார்.

அத்தோடு வடக்கு மாகாணத்தில் சுகாதாரச்சேவைகளை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு 643 சுகாதார ஊழியர்களின் வெற்றிடங்கள் தடையாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது பதிலளித்த சுகாதார மற்றும் வெகுசன ஊடகப் பிரதி அமைச்சர், குறித்த சுகாதார ஊழியர்களாக பணிநியமனம் வழங்கப்பட்டு, பணி இணைப்புச் செய்யப்படாத 454பேரையும் பணியில் இணைத்துக் கொள்ளும் நிலைப்பாட்டிலேயே அரசாங்கமும் உள்ளது - என்றார். (ச-26,246)

## நெடுந்தீவில் நடமாடும் சேவை

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரம்பர் 12ஆம் மற்றும் 13ஆம் திகதிகளில் விசேட சுகாதார நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது. நடமாடும் சேவை தொடர்பாக துறைசார் அதிகாரிகள் மற்றும் உள்ளூர்ப் பிரதிநிதிகளுடனான முன்னாயத்தக் கலந்துரையாடல் பிரதேச செயலாளர் திருமதி. நிவேதிகா கேதீசன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் யாழ். பிராந்திய சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் நிகழ்வு தொடர்பான விளக்கங்களை வழங்கினார். (ச-25,9)

## சந்தைக் கொட்டகை தகரங்கள் துருப்பிடிப்பு

சாவக்சேரி நகரசபை பொதுச்சந்தையின் மரக்கறி விற்பனைக் கொட்டகையின் கூரைத் தகரங்கள் துருப்பிடித்து பழுதடைந்துள்ளன. இதனால் மழைக் காலங்களில் மழைநீர் சிந்தி பொதுமக்கள் பாதிப்பை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சாவக்சேரி நகரசபையின் மூன்றாவது அமர்வில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அதற்கமைய சந்தையின் கூரைத் திருத்தம் உட்பட நவீன சந்தையின் வாயில் கதவு திருத்தம் செய்தல் தொடர்பாக அமர்வில் தீர்மானிக்கப் பட்டது. (ச-131-41)

## சுகாதாரம் பேணாமை; 40,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.24

பருத்தித்துறை நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதாரம் பேணாது இயங்கிய உணவகம் ஒன்றுக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனையின்போது உணவமொன்றில் மருத்துவச் சான்றிதழ் இல்லாமல் ஊழியர்களை உணவகத்தில் அனுமதித்தமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெற்றிலைமென்ற வண்ணம் உணவை கையாண்டமை தொடர்பாக உணவக உரிமையாளர் மற்றும் உணவு கையாண்டவர் ஆகியோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. (ச-26)



## வெற்றிலைத் துப்பல்; வியாபாரிக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஓக.24

பருத்தித்துறை நகர்ப்புறத்தில் அமைந்துள்ள மீன்சந்தையில் மீன் வியாபாரம் செய்யும்போது வெற்றிலை மென்று பொதுவிடத்தில் எச்சில் உமிழ்ந்தவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப் பட் டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் எடுக்கப்பட்டபோது இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது. (ச-26)


## ஆங்கில வகுப்பு

தரம் 3-A/L மாணவர்கள் மற்றும் பணிபுரிபவர்களுக்கு அடிப்படையில் இருந்து கற்பிக் கப்படும்.

தொடர்பு: 076 62 34 978

(CS 38671) A



## வேலையாட்கள் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Family Guest House (குடும்ப தங்குமிட விடுதி) ற்கு தங்கி நின்று பராமரிப்பு வேலை செய்வதற்கு வேலையாள் தேவை.

தொடர்பு: 077 651 0696


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு நிலையைச் சரிசெய்வதற்கு சஜித், ரணில் இணைவு அவசியம்!

## ரவி கருணாநாயக்க வலியுறுத்து

**கொழும்பு, ஓக.24**

**நாட்டின் தற்போதைய நிலைமையைச் சரிசெய்வதென்றால் சஜித் பிரேமதாஸவும் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக ஒருசேரவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சஜித் பிரேமதாஸாவையும் ரணில் விக்ரமசிங்கவையும் ஒன்றுசேர்க்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணையவேண்டும். நாட்டின் தற்போதைய நிலைக்கு இருவரும் தேவை. இருவரும் ஒன்றிணையவேண்டும் என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளார்கள். தேர்தல்கள்மூலம் மக்களிடம் இருந்து கிடைத்துள்ள பெறுபேறுகள் இந்த இணைவை வலியுறுத்துகின்றன.

இருவரும் ஒன்றுசேராவிட்டால் கட்சி இரண்டும் மேலும் பிளவடையும். இது பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். இந்த இணைவானது இந்த கட்சிகளோடுமாத்திரம் நின்றுவிடக்கூடாது, ஏனைய கட்சிகளையும் ஒன்றுசேர்க்கவேண்டும். நாட்டில் இப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சியை சரிசெய்வதென்றால் பொருளாதாரப் புரட்சியொன்று அவசியம். இந்தக் கட்சிகள் ஒன்று சேர்ந்தால் மாத்திரமே அந்தப் புரட்சியை ஏற்படுத்தமுடியும். இந்த அரசாங்கம் அனுபவமற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் சேர்த்து ஒரு சில அமைச்சர்கள் உள்ளனர். அவர்கள் மாத்திரமே அனுபவசாலிகள். இதனாலேயே எல்லா பொறுப்புகளும் அநுரகுமார திஸாநாயக்க மீதுவீழ்கிறது. ரணில் விக்ரமசிங்க அப்படிப்பட்டவர் அல்ல. மிகவும் அனுபவசாலி, திறமைசாலி. நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்த போது அதைக் குறுகிய காலத்துக்குள் கட்டியெழுப்பினார்-என்றார். (எ-75)

# எதிர்வரும் டிசெம்பரில் அரசு விரட்டப்படுமாம்

## கோத்தாவின் முன்னாள் செயலாளர் சுகீஸ்வர பண்டார கூறுகின்றார்

கொழும்பு, ஓக.24

நாட்டில் எதிர்வரும் டிசெம்பர் மாதமாகும்போது தொழிற்சங்கப் போராட்டங்கள் வெடிக்கக்கூடும். டிசெம்பரில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரட்டியடிக்கப்படும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பிரத்தியேகச் செயலாளராகப் பதவி வகித்தவரும், புதிய மக்கள் முன்னணியின் தலைவருமான சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

தபால் சேவையாளர்களின் போராட்டம் தீவிரமாகியுள்ளது. கைவிரல் அடையாளம் பதிவு செய்யப்படுவதற்கு ஜே.வி.பி. சார்ந்த தொழிற்சங்கமே கடந்த காலங்களில் தொழிற்சங்கப் போராட்டங்களை ஆரம்பித்தனர். அந்தத்திட்டத்தைச்சீர்குலைத்தனர். கடந்த 63 ஆண்டுகளாக அரச சேவையை இவர்களே நாசமாக்கினர்.

தபால்சேவையாளர்கள் மட்டுமல்ல சுகாதாரத் துறை, கல்வித்துறை என எல்லாத் துறைகளிலும் போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் டிசெம்பர் ஆகும்போது வேலை நிறுத்தப் போராட்டங்கள் வெடிக்கலாம். இவற்றுக்குப் பதிலளிப்பதற்கு ஆட்சியாளர்களிடம் வேலைத்திட்டம் இல்லை. எனவே, டிசெம்பர் ஆகும்போது ஒளிவதற்குரிய இடங்களை அநுரகுமார திஸாநாயக்க, நளிந்த ஜயதிஸ்ஸ, பிமல் ரத்நாயக்க, லால்காந்த ஆகியோர் தேடிக்கொள்ளவேண்டும்.

ஏமாற்றப்பட்ட அரசாங்க ஊழியர்கள், தனியார் துறையினர், சாதாரண மக்கள் என அனைவரும் வாழ்க்கைச் சுமை தாங்கமுடியாது வீதியில் இறங்கி, ஆட்சியாளர்களை டிசெம்பரில் அடித்து விரட்டுவார்கள்- என்றார். (எ-44)



# சிறப்புரிமை நிறுத்தத்தை எதிர்த்து மூன்று மனுக்கள்

கொழும்பு, ஓக.24

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளின் உரிமைகளை இரத்துச்செய்யும் சட்டமூலத்தின் விதிகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேலும் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த இந்தச் சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது என்று அறிவிக்கக்கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் மஹிந்த பத்திரண, சட்டத்தரணி மனோஜ் கமகே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் மற்றும் கடற்படையின் முன்னாள் தலைமைத் தளபதி எஸ்.எம். விஜேவிக்ரம ஆகியோர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். மனுவில் சட்டமா அதிபர் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ளார். (எ-இ)

# புதிய கட்டடத்தொகுதிக்கு மணிக்கடைகளை மாற்றுக

## சாவகச்சேரி நகரசபைத் தலைவர் அறிவிப்பு

சாவகச்சேரி, ஓக. 24

சாவகச்சேரி நகரசபை பொதுச்சந்தை வளாகத்தில் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுச்சந்தை வளாகத்தில் தற்போதைய விற்பனைக்கூடத்தில் பழக்கடை மற்றும் வெற்றிலைக்கடைகளுடன் இயங்கிவரும் மணிக்கடைகளைப் புதிய கட்டடத்துக்கு மாற்றம் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சபையின் தலைவர் வே.ஸ்ரீபிரகாஸ் அறிவித்துள்ளார்.

இதற்கு மணிக்கடையினர்களின் பதிலுக்கு 15 தினங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதெனவும் சபையின் தவிசாளர் தெரிவித்தார். (ச-131-41)

# சுவசெரிய சேவையை அதிகரிக்க ஜனாதிபதி அநுரகுமார பணிப்பு

கொழும்பு, ஓக.24

சுவசெரிய அம்புலன்ஸ் சேவை தற்போது நாடுமுழுவதும் 272 இடங்களில் இயங்கும் நிலையில், அதை 400 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

30 ஆயிரம் பேருக்கு ஒருவராக உள்ள ஆரம்ப சுகாதாரசேவையை 10 ஆயிரம் பேருக்கு ஒருவராக மேம்படுத்துவதற்கான திட்டங்களைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு தொடர்பான 2025 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியின்கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய ஆய்வு மற்றும் 2026ஆம் ஆண்டுக்கான முன் வரவு-செலவுத் திட்டக் கலந்துரையாடல் ஆகியவை அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. அதிலேயே ஜனாதிபதி இந்தப் பணிப்புரைகளை விடுத்துள்ளார். சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின்கீழ் உள்ள 4 திணைக்களங் களில் 41 நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் அதன் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. ஆரம்ப சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கு சுகாதார அமைச்சின்கீழ் அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் விசேட கவனம் செலுத்தவேண்டும் என்று ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணித்தார். தற்போதைய தொழில்நுட்ப மற்றும் சமூக நிலைமைகளுக்கு ஏற்ப சுகாதார சேவையில் நிறுவன ரீதியிலான மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களை மேற்கொள்வதற்கான திட்டங்கள் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

# வரிகளை உயர்த்தியதாலேயே சுங்கத்தின் வருமானம் கூடியது

## சாடுகின்றார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, ஓக.24

இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான வரியை அரசாங்கம் பெரியளவில் அதிகரித்துள்ளமையாலேயே சுங்கத்தின் வருமானம் அதிகரித்துள்ளது. வாகனங்களுக்கான வரியை நூற்றுக்கு 200இல் இருந்து 600 வரை அதிகரித்துள்ளது. இதனால் மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற சுங்கக் கட்டளைச் சட்டத்தின்கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

சுங்கத்தின் வருமானம் ஒரு ரில்லியன் ரூபாவரை அதிகரித்துள்ளது என்று சுங்க பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த வருமான அதிகரிப்பு பெரும் வரி அதிகரிப்பினால் கிடைத்த வருமானமே தவிர, சுங்கத்தால் ஏதாவது உற்பத்தி செய்து பெற்றுக்கொண்ட வருமானம் அல்ல. அரசாங்கம் இறக்குமதியாளர்களுக்கு அதிகரித்திருக்கும் வரிகளை, அவர்கள் நுகர்வோரிடமிருந்தே அறவிடுகின்றனர். அதனால் இன்று மக்களின் பொருள்களை விலைக்கு வாக்கும் இயலுமை குறைந்துள்ளது. அதனாலே நாட்டில் குறைந்த வருமானம் பெறுபவர்களின் வீதம் அதிகரித்துள்ளது. ஜனாதிபதி தேர்தல் மேடைகளில் இளைஞர்களை பார்த்து, ஜப்பான் மோட்டார் சைக்கிள் ஓட்ட ஆசை இல்லையா? என்று கேட்டார். ஆனால் தற்போது சாதாரண சைக்கிள் ஒன்றைக் கூட விலைக்கு வாங்க முடியாத அளவுக்கு அரசாங்கம் வரி அதிகரித்துள்ளது என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

பிள்ளை பராமரிப்பிற்கும், சமையல் வேலைக்கும் வீட்டுடன் தங்கிநின்று வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு
அரியாலை 077 925 1728
(CS/59206) J-1

## ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் 8ஆவது வருட குருபூசை



காலம் : 25.08.2025 திங்கட்கிழமை
நேரம் : காலை 11 மணி
இடம் : ஆச்சிரம மண்டபம்

**குறிப்பு:**
குருபூசை நிகழ்வின் பின்னர், மாலை 2 மணிக்கு ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் சமாதி கோயில் பற்றிய பொதுக்கூட்டம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. சகல அங்கத்தவர்களுக்கும், மெய்யடியார்களுக்கும் இரு நிகழ்விலும் பங்குபற்றி சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பே சிவம்

மகாதேவ ஆச்சிரமம்
கிளிநொச்சி.

குருநாதன் பணியில்
அறங்காவலர்
நிர்வாக உறுப்பினர்கள்

# அழகாபுரி கிராம வீதியை புனரமைத்துத் தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

பல வருட காலமாகப் புனரமைப்பின்றிக் காணப்படும் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இராமநாதபுரம் அழகாபுரிக் கிராம பிரதான வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முன்னைய காலத்தில் கண்டி வீதி என அழைக்கப்பட்ட குறித்த வீதியை அழகாபுரி கிராமத்திலுள்ள சுமார் 300 குடும்பத்துக்கு மேற்பட்டவர்கள் பயன்படுத்திவருகின்றனர். இந்த வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுவதன் காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் எனப் பலரும் தமது நாளாந்த செயற்பாட்டை முன்னெடுக்கமுடியாத நிலையில் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். தேர்தல் காலங்களில் மாத்திரம் வருகைதரும் அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை மட்டும் வழங்கிவிட்டுச் செல்கின்றனர். பின்னர் அடுத்த தேர்தல் வரும்பொழுதுதான் அவர்களைக் காணமுடிகின்றது. எனவே இந்த வீதியைச் சீரமைத்துத் தர உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் சுட்டிக்காட்டினர். (ச-113)

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தில் வதியும் 1989ம் ஆண்டு பிறந்த யாழ் இந்து (V) 4இல் சூரியன் செவ்வாய், பூரம் நட்சத்திரம் O/L படித்த நல்ல பண்பான மணமகளுக்கு பெற்றோர் நற்பண்பான மணமகனை வெளிநாட்டில் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு
0041 779 337 169, 0044 738 404 1272
(CS/59205) J-1

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் - 1983 - இந்து - V - ரோகிணி
3ம் பாதம் - 8 செவ்வாய் - கி.பா - 56
உயரம் - 5'.5" - Accountant & Cashier (Private)
ஆணுக்கு மணமகள் தேவை (வெளிநாடு வேண்டாம்)
தொடர்பு: 077 395 6857
(CS 3658 B) E

## வேலைக்கு ஆட்கள் தேவை

தையல் வேலை தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு: 076 793 0169

## மரண அறிவித்தல்



மலர்வு 13 . 04 . 1964
உதிர்வு 22 . 08 . 2025

### திருமதி ஜெயலக்சுமி சிவலிங்கம்

தாவடி தெற்கை பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலக்சுமி சிவலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (22.08.2025) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரட்ணம் - கமலாதேவி தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திரு.சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கோபிதரன் (நெதர்லாந்து), சர்மினி (France), கம்சாயினி (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும் வினோலி, தவக்குமார், துஷியந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ரியான், ரியாசினி ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், தன்சிகா, தரணி, தஸ்வின், தனுசியா, துஷான், தருன், ஆகியோரின் அம்மம்மாவும், சிவலோகநாதன் (ஜேர்மனி), சிவயோகராணி, சந்திரவதனி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தி, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் ஞானசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் 15/3 திருவள்ளுவர் சாலை, அரசடி வீதி, கந்தர்மடத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 412 3648
(CS 59200) E

## யாழ்ப்பாணம் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சாமுவேல் மான் வீதியில் ( Samuel Mann veethy) யாழ்ப்பாண நகரிலிருந்து பத்து கிலோ மீட்டர்கள் தூரத்தில் ஏறத்தாழ நூற்றுப்பத்து பேர்ச் காணி விற்பனைக்குண்டு .
வீடு கட்ட, குடியிருக்க மிகவும் சிறந்த இடம். பயன்தரும் மரங்களுடனும் நன்னீர் கிணற்றுடனும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0763623189

## வீடு வாடகைக்கு

வீடு வாடகைக்கு உண்டு
தாவடி சந்தி யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு: 077 020 4276

# விற்பனைக்கு

RVR வவுனியா நிறுவனத்திடம் கீழ்காணும் பொருட்கள் விற்பனைக்குண்டு

- நல்ல நிலையில் உள்ள சிறிதுகாலம் பாவித்த கடைச்சல் இயந்திரம் (Leath Machine)
- ஒட்டுவேலைக்குப் பயன்படும் Gas சிலிண்டர்
- பல வகையான இயந்திரங்கள் (Engine)
- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட மின்பிறப்பாக்கி (Generator - 3Phase)
- நீர் சுத்திகரிக்கும் இயந்திரம்

பார்வையிடும் நேரம்
காலை 08.00 மணி - மாலை 04.00 மணி
இல 43, கூமாங்குளம் பிரதான வீதி, உக்கிளாங்குளம், வவுனியா
தொடர்புகளுக்கு: 077 357 373 / 076 226 7677
(CS 59170) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னார் நானாட்டான் டி லாசால் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை முதல்வர் அருட்சகோதரர் ஏ.மனோ ரஞ்சிதன் தலைமையில் சிறப்பு மருத்துவ முகாம் கல்லூரி வளாகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 56)

# எதிர்கால விழுதுகள் வேரூன்ற பண்பாடுகளை ஊடுகடத்துங்கள்!

வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஓக.24**

**எங்கள் கலாசாரம், அடிப்படை விழுமியங்களை அடுத்த தலைமுறைக்கு நாம் எடுத்துச் செல்லவேண்டும். எங்களுக்குரிய தனித்துவமான அம்சங்களை ஊடு கடத்த வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள் ளார். வலி. மேற்கு பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து நடத்திய பண்பாட்டு பெருவிழாவில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித் தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், பிரதேச, மாவட்ட, மாகாண கலாசார விழாக்கள் பல கலைஞர்களுக் கான மேடை வாய்ப்புகளை வழங் குகின்றன. நிகழ்வுகள் நடைபெறு வதற்கு தொடர்ந்து ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதிகளவு கலைஞர்களைக் குறிப்பாக இளம் கலைஞர்களை மேடையேற்ற வேண்டும்.

சிறுவர்களாக நாங்கள் இருந்த காலத்தில் பல்வேறு கலை நிகழ்வு கள் பல்வேறு இடங்களில் நடைபெ றும். இன்று அவ்வாறு நடைபெறு வதைக் காண்பது அரிதாக உள் ளது. நாங்கள் எங்கள் கலாசாரம், அடிப்படை விழுமியங்களைக் கைவிடக்கூடாது. அடுத்த தலை முறைக்கு அதை நாம் எடுத்துக் செல்லவேண்டும். எங்களுக்குரிய தனித்துவமான அம்சங்களை ஊடு கடத்த வேண்டும். கலை, விளை யாட்டு இரண்டிலும் இளம் சந்ததி யின் பங்கேற்பை ஊக்குவிக்க வேண்டும். அவர்களின் கவனங் கள் சிதறவிடாது பார்த்துக்கொள்ள வேண்டும் - என்றார். (ச-159)



திருகோணமலை வில்லூன்றி கந்த சுவாமி ஆலய தேர் உற்சவம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை பக்தர்கள் புடைசூழ சிறப்பாக இடம் பெற்றது. (ச -25,50)

# பெற்றோருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.25

'சிறார்களை நெறிப்படுத்தி வளப்படுத்தல்' எனும் தொனிப்பொருளில் பெற்றோருட னான கலந்துரையாடல், கந்தர்மடம், பலாலி வீதி, சுகர்ணி கட்டடத்திலுள்ள நித் திலம் கலையகத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஈழத்தமிழ் கலைஞர்கள் ஒன்றியம், கலை மேம்பாட்டுக் குழு மற்றும் நித்திலம் கலை யகம் ஆகியன இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

நிகழ்வில் விருந்தினர்களாக அமெரிக்கா ஓஹியோ மருத்துவமனை நிர்வாகி மருத்து வர் காவேரி சிவரூபன், அமெரிக்கா வாஷிங் டன் மாநில முதன்மை சிகிச்சை நிலைய நிர்வாகி மருத்துவர் சுமிபதி, அமெரிக்கா நியூயார்க் மனநல மருத்துவ நிலைய நிர்வாகி மருத்துவர் ராஜம் தெய்வேந்திரன் ஆகி யோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)



## கிழக்குப் பல்கலைக்கழக முதல்வராக பேராசிரியர் சுந்தரேசன் பதவியேற்பு

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத் தின் முதல்வராக நியமிக்கப்பட்ட விசேட பொது மருத் துவ நிபுணர் பேராசிரியர் தட்சிணாமூர்த்தி சுந்தரேசன் தனது கடமையைக் கடந்த செவ்வாய்க்கிழமை பொறுப்பேற்றார்.

சிவாநந்த தேசியப் பாடசாலையின் பழைய மாணவ ரும், கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவப் பீட முன் னாள் பீடாதிபதியுமான இவர், உயர்கல்வித்துறையில் தேசிய, சர்வதேச அளவில் பல்வேறு கல்விப் பணி களை ஆற்றிவருகிறார்.

தனது மருத்துவ சேவைக்கு அப்பால் பல சமூக சேவைகள் மற்றும் ஆன்மிக அமைப்புகள் வழியாக பல பணிகளைச் செய்துவருவதுடன், சிறந்த ஆய்வா ளராகவும், சுமார் 50க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டு ரைகளையும், மருத்துவம், ஆன்மிகம் மற்றும் சமூக விழிப்புணர்வு சார்ந்த பல நூல்களையும் இவர் எழுதி யுள்ளார். (எ-25)

**மாகாணமட்ட தடகளம்**

## அரிப்பு றோ.க.த.க.பாடசாலை பதக்கங்களைக் குவித்து சாதனை

மன்னார், ஓக.24

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 16 ஆவது வருடாந்த தடகள விளையாட்டுப்போட்டியில் மன்னார் அரிப்பு றோ.க.த.க. பாடசாலை பெண் கள் அணி வடக்கு மாகாணத்தில் முதலிடம் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

மன்னார் வலயப் பாடசாலைகளுக்குள் அரிப்பு றோ.க.த.க. பாடசாலை ஒட்டுமொத்தமாக 8 தங் கப்பதக்கங்களையும் ஒரு வெள்ளிப்பதக்கத்தை யும், 3 வெண்கலப்பதக்கங்களையும் கைப்பற்றி யதுடன் 116 புள்ளிகள் பெற்று முதலிடத்தைத் தட் டிச்சென்றுள்ளது. வி.நிவின்சலா பெர்னாண்டோ 100, 200, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பங்கு பற்றி முதலிடம் பெற்று 18 வயதின்கீழ் பெண்கள் பிரிவில் சுவட்டு நிகழ்ச்சியில் சிறந்த வீராங்கனை யாகத் தெரிவுசெய்யப்பட்டார். (ச-25, 56)



### ஒன்றிணைந்தன...

பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங் கிரஸ் மற்றும் நாடாளுமன்றத்தில் உள்ள பிற அரசி யல் கட்சித் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகள், இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தனர்.


முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, மைத்திரி ஆகியோ ரும் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

முன்னாள் ஜனாதிபதியான சந்திரிகா எதிர்க்கட்சிக ளின் நடவடிக்கைக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளார். காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இந்தக் கலந்துரையாடலில் அவர் கலந்துகொள்ள வில்லை. கோத்தாபய ராஜபக்ச வெளிநாட்டில் இருப் பதால் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவில்லை. ஆனால், அவரும் எதிர்க்கட்சிகளின் நகர்வை ஆத ரித்துள்ளார். (அ-ம-44)

### ரணிலை...

எதிரான சட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டி ருந்த சமநேரத்தில் பேராசிரியர் சோராஜ் போல் கால மானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சந்நிதியானுக்கு...

அளவில் ஆயிரக்கணக்கான அடியவர்களின் அரோகராக் கோஷங்களுக்கு மத்தியில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆலய மஹோற்சவத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பூங்காவனத் திருவிழாவும், 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கைலாசவாகனத் திருவிழாவும், 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் சப்பறத் திருவிழாவும், 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் தேர்த் திருவிழாவும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், அன்றைய தினம் மாலை 6 மணியளவில் மௌனத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ-ச-66-17-26)

## அதிதீவிர...

ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நீதிமன்ற உத்தரவுக்கு அமைய வெலிக்கடை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட சிலமணி நேரத்தில், உயர் குருதி அழுத்தம் மற்றும் குருதியில் சக்கரை மட்டம் அதிகரிப்பு என்பவற்றால் மருத்துவ ஆலோசனைக்கு அமைய அவர் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நேற்று அவருடைய உடல்நிலை மேலும் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் நீர்ச்சத்துக் குறைபாடு காரணமாக, அவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்ட நிலையில், அங்கு அவர் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

ரணில் விக்கிரமசிங்க அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள விடயம், காட்டுத்தீயாகப் பரவியதைத் தொடர்ந்து, ரணிலின் ஆதரவாளர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் குவியத் தொடங்கினார்கள். இதையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அசம்பாவிதங்களைத் தவிர்ப்பதற்காகவும் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (அ-ம-44)

## சட்ட...

கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாக சட்டமருத்துவ அதிகாரியாக, சட்டமருத்துவ நிபுணர் க.வாசுதேவா கடமையாற்றிவந்திருந்தார். கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உள்ளிட்ட பல்வேறு முக்கியமான வழக்குகளில் சிறப்பாகச் செயற்பட்ட அவர், தற்போது மேற்படிப்புக்காக வெளிநாட்டுக்குச் சென்றுள்ளார். இதையடுத்து, முல்லைத்தீவில் சட்டமருத்துவ அதிகாரியின் பதவிக்கு ஏற்பட்ட வெற்றிடம் இன்னமும் நிரப்பப்படவில்லை.

சட்ட மருத்துவ நிபுணர் இல்லாத காரணத்தால், சந்தேகத்துக்கு இடமான உயிரிழப்புகள் உள்ளிட்ட பல விடயங்களில், சடலங்களை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும், வவுனியா பொது மருத்துவமனைக்கும் அனுப்பவேண்டிய நிலையே காணப்படுகின்றது. இதனால் மக்களுக்கும் பொலிஸாருக்கும் பெரும் அலைச்சல் ஏற்பட்டுள்ளது. எனவே, இந்த வெற்றிடத்தை நிரப்பி மக்களுக்கு சரியான மருத்துவ சேவையை வழங்குவதற்கு சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ம-19)

## ரணில்...

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான கவிந்த ஜயவர்தன மற்றும் மயந்த திசாநாயக்க ஆகியோரால் இந்த முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளது. அந்த அமர்வில் பரிசீலிக்கும் வகையிலேயே இந்த முறைப்பாடு கையளிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

## தொண்டைமானாறு...

(வயது-52) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கடலில் சடலமொன்று மிதப்பதாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதே மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்குச் சென்ற கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைத்து உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அவர் உத்தரவிட்டார். (அ-ம-100)

## நாளைய...

துள்ளது. அவற்றில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறும், மக்களின் பயன்பாட்டுக்கு அவற்றை ஒப்படைக்குமாறும் வலியுறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவைத் தெரிவித்துவரும் நிலையில், பருத்தித்துறை வர்த்தகர்களும் தங்களுடைய ஆதரவை உறுதிப்படுத்தியுள்ளனர்.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தை வியாபாரிகள் நாளை வியாபார நடவடிக்கைகளை முற்றாக நிறுத்துவது என்று தீர்மானித்துள்ளனர். அதுபோல், பருத்தித்துறை நகர்ப்பகுதி வர்த்தகர்களும் நாளை காலை கடைகளை மூடி போராட்டத்தை ஆதரிப்போம் என்று அறிவித்துள்ளனர். (அ-ம-100)

## மீன் வாடியில்...

யில், இன்னொருவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - செங்கலடிப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி வடிவேல் (வயது-48) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் மட்டக்களப்பு செங்கலடியைச் சேர்ந்தவர்களும் புத்தளம் உடப்புப் பகுதியைச் சேர்ந்தவர்களும் வாடியமைத்து கடற்றொழிலில் ஈடுபட்டுவருகின்றனர். நேற்றுமுன்தினம் அவர்கள் உரையாடிக்கொண்டிருந்தபோது அவர்களுக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதைத் தொடர்ந்தே கத்தி வெட்டுத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு - செங்கலடிப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி வடிவேல் உயிரிழந்ததுடன், அதே பகுதியைச் சேர்ந்த இன்னொருவர் காயமடைந்துள்ளார். படுகாயமடைந்தவர் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் அடிப்படையில் புத்தளம் உடப்புப் பகுதியைச் சேர்ந்த நபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. கைதுசெய்யப்பட்டவர் 30 வயதுடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-100-113-26)

## இனப்...

தாயகச் செயலணி அமைப்பினரால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு செம்மணியில் கொல்லப்பட்டோருக்கும், போரில் உயிரிழந்தோருக்கும் அஞ்சலி செலுத்தினார்கள்.

தொடர்ச்சியாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பிவைப்பதற்கான ஆவணத்துக்கான கையொப்பச் சேகரிப்பும் இடம்பெற்றது. (அ-ம-27-20)

**காணி விற்பனைக்கு**
நிலாவரைக் கிணற்றை அண்மித்த சூழலில் காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 040 3762

**வாடகைக்கு**
4 அறைகள் மற்றும் 2 இணைந்த குளியல் அறையும் கொண்ட புதிய வீட்டின் மேல்தளம் உடனடியாக வாடகைக்கு உண்டு.
தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தொடர்பு: 077 166 3859
077 257 5712

**காணி விற்பனைக்கு**
ஆடிய பாதம் வீதியில் இருந்து 100m தொலைவில் 1/2 பரப்பு காணி துண்டு விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 257 5712
077 166 3859

**AC gas**




சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உயர்தரப் பொருட்கள் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு
077 738 0263

## மரண அறிவித்தல்

தோற்றம்: 11 . 11 . 1952



மறைவு: 22 . 08 . 2025

### அமரர் நாகலிங்கம் ஆனந்தசிவம்

மீசாலை கிழக்கினை பிறப்பிடமாகவும் இல-01, சிவன் கோவில் வீதி, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட நா.ஆனந்தசிவம் கடந்த (22.08.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், மதுரேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவரூபன் (நீதிமன்றம், யாழ்ப்பாணம்) அஜந்தி (ஆசிரியர் - யா/தனங்கிளப்பு GTMS), சிந்துயா (ஆசிரியர் - கி/கிளிநொச்சி மத்திய கல்லூரி), டனுஷியா (ஆசிரியர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), நிரோஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகம்மா, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, பரமசிவம் மற்றும் நடராசசிவம், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் - 077 248 7175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்வகை பல் வைத்திய சேவைக்கு.... ஆரியகுளச் சந்தியில், Professional Dental Care



### INTERNATIONAL DENTAL CARE

INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD

professional Dental Care in Sri Lanka

**Colombo Branch**
N0. 79/9, W.A.Silva Mw,
Wellawatta, Colombo - 06, Sri Lanka.
Tel : + (94) 11 2507070,
Mob : + (94) 77 0139372, + (94) 77 0139376
W.App : + (94) 76 5224273

**Vavuniya Branch**
Raaj Medical Lab.
No:10, Bazaar Street, Vavauniya, Sri Lanka.
Tel : + (94) 24 2221577
Mob : + (94) 77 0139374
W.App : + (94) 77 059 5221

**Jaffna Branch**
N0. 84, Stanly Road,
Jaffna, Sri Lanka.
Tel : + (94) 21 2220833
Mob : + (94) 77 0031547
W.App : + (94) 77 003 1548

## இலவச கண் மருத்துவ முகாம்

எமது அறக்கட்டளையினால் எதிர்வரும் 31.08.2025 அன்று கோண்டாவில் மேற்கில் (கோண்டாவில் இந்துக்கல்லூரிக்கு அண்மையாக) அமைந்துள்ள நிலையத்தில் காலை 08.30 மணியளவில் இலவச கண் மருத்துவ முகாமும், வைத்திய ஆலோசனைகளும், வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்க உள்ளோம். 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை மற்றும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்துடன் சமூகம் அளித்து பயன் பெறவும். ஏற்கனவே பங்குபற்றியவர்கள் தவிர்க்கவும். 077 258 6022 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளவும்.

**Ratnam Kanagasabai Memorial Trust**

(CS 59193) E

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் பிரபலமான நட்சத்திர ஹோட்டலுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

- HR Coordinator (மனிதவள ஒருங்கிணைப்பாளர்)
- Storekeeper (களஞ்சியக்காப்பாளர்)
- Drivers (சாரதி)
- Waiters (உணவு பரிமாறுபவர்)
- Kitchen Helpers (சமையல் உதவியாளர்கள்)

ஹோட்டல் அனுபவம் விரும்பத்தக்கது.

070 789 6613 077 723 8373
gmnorthgatejaffna@outlook.com
உங்கள் சுயவிபரக்கோவையை இந்த WhatsApp No இற்கு அல்லது Email முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

(CS 59194) E

## பதவி வெற்றிடம்

**DIGITAL MEDIA OFFICER**

சமூக ஊடகங்களான INSTAGRAM, YOUTUBE, LINKEDIN, FACEBOOK போன்றவற்றில் தேர்ச்சி மற்றும் வேலை செய்த முன் அனுபவம்
PHOTOGRAPHY, VIDEOGRAPHY & EDITING செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

தொடர்பிற்கு: 077 715 7070
TAATAS (PVT) LTD BROWN ROAD, JAFFNA
WWW.TAATAS.COM

(CS 58311) E

## இரண்டாம் மொழி சிங்களம்

2026ம் ஆண்டிற்கான தரம் 6 மாணவர்களிற்கும், ஆரம்பப்பிரிவு மாணவர்களிற்குமான (1-5 வரை) வகுப்புக்கள் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.

ஆரம்பம் : 27.08.2025 புதன் மாலை 3 மணி

6 -11 வரையான சிங்கள வகுப்புகளும் பேச்சு மொழி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

இடம் : 55/6 கல்லூரி வீதி
இலங்கை வேந்தன் மண்டப அருகில்

தொடர்புகளுக்கு
077 990 6867, 076 970 6867

(CS 59199) E

## IELTS CLASSES

Conducted by the Colombo Lecturer

- IELTS, General, UKVI & Academic
- UK A, Exam (Family visa)
- Advanced English & Spoken
- Visa Consultation to UK, Germany, Canada and Australia
- Computer Based Practical

Please Contact:- 077 780 3970

## அண்ணா பொதிகள் சேவை

யாழ்ப்பாணம்

UK - 1,350/- 16+
France - 2,050/- 16+
Germany - 1,950/- 16+
Canada - 2,600/- 16+

தேவை
வேலையாட்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
யாழ்.நகரத்துக்கு அண்மையில் இருப்போர் விரும்பத்தக்கது.

075 330 5500 / 070 330 5500

## கடை வாடகைக்கு

பண்டத்தரிப்பு நகரில் இரு கடைகள் சேர்ந்த நிலையில் (மேல்மாடி) வாடகைக்கு உண்டு. வங்கிகள், நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

Whatsapp:- 0044 773 043 6750

(CS/58202) J-1

## மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்கு உண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப் பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு: 076 3249 977
077 4121 100

(CS 59178) A

## காணி விற்பனைக்கு

யாழ், நல்லூர் குறொஸ் றோட்டில், 2 நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய, 11 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்கு உண்டு.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள:

077 801 5156

## வேலையாட்கள் தேவை

கம்பஹாவில் உள்ள ஒரு ஹோட்டலுக்கு அனுபவம் வாய்ந்த வெய்ட்டர்மார் தேவை.
சம்பளம் ஒரு நாளைக்கு 1600 ரூபா மற்றும் உணவு தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

071 222 0999

(CR 45895) E

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் உடன் தேவை.
தளபாட பெயின்ரர் (70000/- மேல்)
கூலி வேலையாட்கள் (60000/- மேல்)
நேரில் வரவும்

தொடர்பு:-
ஆர்க் தளபாட நிலையம்
35, கொட்டைக் காடு வீதி, கோண்டாவில்கிழக்கு. (பஸ் டிப்போ அருகாமையில்)
021 221 9909, 077 300 1763

## பெண் பணியாளர் தேவை

வீட்டில் தங்கிநின்று வயோதிப தாய் தந்தை இருவரையும் பராமரிக்க பெண் பணியாளர் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு:- 075 272 4964

## வீடு வாடகைக்கு உண்டு

நவீன வசதிகளுடன் கூடிய மாடி வீட்டின் மேற்பகுதி மட்டும் வாடகைக்கு உண்டு. மேலதிக விபரங்களுக்கு இடைத்தரகர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

074 216 8717, 074 223 6815

(CS/59197) J-1

## Spoken English & Grammar Classes

Grade 7 to பட்டதாரிகள்
International School Students
K.Ganesh B.A (UOP)

077 766 8725

## பணிப்பெண் தேவை

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் தங்கியிருந்து வைத்தியர் (Doctor) இன் அம்மாவை பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. தொடர்புகளுக்கு

077 262 7812, 077 541 7812

(CS/59203) J-1

## காணி விற்பனைக்கு

K.K.S றோட் முகப்புடன் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு. (மருதனார் மடம் சந்தியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி 300m தூரத்தில்) 30 அடி அகலமும் 160 அடி நீளமும் கொண்டது. கடைகளுக்கு பொருத்தமானது. விலை 52 மில்லியன்.

தொடர்பு:- 077 082 1010

(CS/59190) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள அழகுக் கலை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை (Pedicure அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) 077 774 3185

## வாடகைக்கு தேவை

யாழ் நகர்ப்பகுதிகளில் கடை வாடகைக்கு/குத்தகைக்கு தேவை. யாழ் வளைவில் இருந்து யாழ் TOWN பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 571 2611

## வேலைவாய்ப்பு

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில் வசிக்கும் வயதான பெண்ணை பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் தேவை. மாத சம்பளம் 60 000/-

தொடர்புகளுக்கு Whats app:
+ 44 790 307 1264 (UK)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 24.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

ஆவாம்நாம் ஆக்கம் நசைஇ அறம்மறந்து
போவாம்நாம் என்னாப் புன்நெஞ்சே – ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி எனினும்நின் வாழ்நாட்கள்
சென்றன செய்வது உரை.

– நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆவணி 08 ஞாயிற்றுக்கிழமை (24.08.2025) சிகரம் :153

# கடையடைப்பு: ஒரு போஸ்ட் மோர்ட்டம்

○ நிலாந்தன்

தமது கட்சியின் கட்டுப்பாட்டிலிருக்கும் உள்ளூராட்சி சபைகளை வைத்துக்கொண்டு கடையடைப்பை இலகுவாக அமுல்ப்படுத்தலாம் என்று சுமந்திரன் சிந்தித்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தது போல கடையடைப்பு முழு வெற்றி பெறவில்லை. அது முழுமையாகத் தோற்கவும் இல்லை; முழுமையாக வெற்றி பெறவும் இல்லை. குறிப்பாக மக்கள் அதிகமுடைய யாழ்ப்பாணத்தில் அது பெருமளவுக்குச் சொதப்பிவிட்டது. கிழக்கில் வெற்றி பெற்றிருக்கிறது. வன்னியிலும் அது பாதி வெற்றி, பாதி தோல்வி என்ற நிலைமைதான்.

இப்படி ஒரு நிலைமை வரக்கூடாது என்று சுமந்திரன் திட்டமிட்டு உழைத்தார். கடையடைப்பை எந்த விலை கொடுத்தாவது வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று அவரும் ,அவருடைய அணியினரும் சகல மாவட்டங்களிலும் கடுமையாக உழைத்தனர். வெற்றியைக் குறித்த சந்தேகங்கள் இருந்த காரணத்தாலும் விமர்சனங்களின் விளைவாகவும் கடையடைப்புக்கு நேர வரையறையையும் அறிவிக்க வேண்டிவந்தது. எனினும் எதிர்பார்த்த அளவுக்கு கடையடைப்பு பூரண வெற்றி பெறத் தவறியது.

உண்மையில் இது தமிழரசுக் கட்சியின் அல்லது சுமந்திரனின் போராட்டம் அல்ல. முழுத் தமிழ் மக்களும் இனமாகப் போராட வேண்டிய விடயம் இது. முல்லைத்தீவில் இறந்த இளைஞர் யார்? அவர் இறப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியது யார்? இதில் படைச் சிப்பாய்களுக்கும் அவருக்கும் இடையில் இருந்த உறவு என்ன ? போன்ற விடயங்களைத் தனியாக ஆராயலாம். தமிழ்ப் பகுதிகளில் முகாமிட்டிருக்கும் படையினருக்கும் அந்தப் படை முகாம்களை அண்டியிருக்கும் பகுதிகளில் வாழும் ஒரு பகுதி குற்றவாளிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. இது ஒருவகையில் குற்றப் பின்னணியைக் கொண்ட தொடர்புதான். தமிழ்ப் பகுதிகளில் உள்ள குறிப்பிட்ட சில குற்றவாளிகள் படைத்தரப்பினரோடு பல்வேறு வகையான உறவுகளைக் கொண்டிருக்கின்றார்கள். போதைப்பொருள் விநியோகம்;பாலியல் தொழில், அரச சொத்துகளைக் கள்ளமாக விற்பது போன்ற பல விடயங்கள் இதில் சம்பந்தப்படுகின்றன. தமிழ்ப் பகுதிகளில் காணப்படும் போதைப்பொருள் வலைப் பின்னலும் இப்படிப்பட்டதுதான் என்ற குற்றச்சாட்டை தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக முன்வைத்து வருகிறார்கள்.

முல்லைத்தீவில் சம்பந்தப்பட்ட இளைஞர் வாழும் குடியிருப்பு ஜீவன் குடியிருப்பு என்று அழைக்கப்படுகிறது. வறிய அந்தக் குடியிருப்பைச் சேர்ந்த ஒரு சிறு பகுதியினர் முத்து ஐயன்கட்டுப் பகுதியிலுள்ள படை முகாமோடு தொடர்புகளை ஏற்கனவே வைத்திருக்கிறார்கள். இந்தத் தொடர்புகளின் விளைவாகத்தான் அந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறது.

இந்தக் குற்றப் பின்னணியை வைத்துக்கொண்டு இதில் அரசியல் இல்லை, இதில் படையினர் குற்றவாளிகள் இல்லை என்பன போன்ற விளக்கங்களை ஒரு பகுதி தமிழர்களே எழுதி வருகிறார்கள். சுமந்திரனை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டு அல்லது கடையடைப்பை எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டும் ஒரு பகுதி அரசியற் செயற்பாட்டாளர்களும் அவ்வாறு எழுதி வருகிறார்கள். அங்கே ஓர் அடிப்படை உண்மையை விளங்கிக்கொள்ள வேண்டும். அந்த இடத்தில் ஒரு படை முகாம் இருந்த காரணத்தால்தான் அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அங்கே ஒரு படை முகாம் இருந்தமை என்பது தமிழ் நோக்கு நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அது ஆக்கிரமிப்பு நோக்கங்களுக்கான ஒரு படை முகாம்தான் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. எனவே தமிழ்ப் பகுதிகளில் படையினரின் பிரசன்னத்தை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் பார்த்தால் அங்கே அந்த முகாம் இருந்ததை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. அந்த முகாம் அங்கு இருந்தபடியால்தான் அந்தக் குற்றச்செயல் இடம்பெற்றது. எனவே



அடிப்படைக் காரணம் படைப்பிரசன்னம்தான். தமிழ்ப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு நோக்கத்துக்காக படையினர் நிலை கொண்டிருப்பதுதான்.

இந்த அடிப்படையில் பார்த்தால், அந்தப் படைப் பிரசன்னத்திற்கு எதிராக சுமந்திரன் அழைத்த போராட்டம் சரி. கடையடைப்பு என்று போராட்டம் சரியா இல்லையா என்ற விவாதம் ஏற்கனவே தமிழ் அரசியல் பரப்பில் ஆழமாக நடந்திருக்கின்றது. கடையடைப்பு அல்லாத வேறு போராட்ட வடிவங்களை தமிழரசுக் கட்சி யோசித்திருக்கலாம். அப்படி யோசிப்பதற்குத் தேவையான போராட்டப் பாரம்பரியம் அவர்களிடம் இல்லை என்று கூற முடியாது. 1950 களில் தந்தை செல்வாவின் தலைமையில் சத்தியாக்கிரகம் செய்த ஒரு கட்சி அது. அந்த சத்தியாக்கிரகத்தில் அடி வாங்கிய ஒரு கட்சி. ஆனால் அன்றிலிருந்து இன்று வரை கிட்டத்தட்ட 75 ஆண்டுகலின் பின்னரும் ஒரு புதிய போராட்ட வடிவத்தை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. பொருத்தமான காரணங்களுக்காக, பொருத்தமான விதங்களில் போராட வேண்டும் என்ற அரசியல் தரிசனம் அந்தக் கட்சியிடம் இல்லை என்பதால்தான் அவர்கள் நமத்துப்போன போராட்ட வடிவங்களைத் தெரிவு செய்கிறார்கள். அந்த அடிப்படையில் கடையடைப்பை விமர்சிக்கலாம். ஆனால் படைப் பிரசன்னத்துக்கு எதிராக நடந்த ஒரு போராட்டத்தை விமர்சிக்கத் தேவையில்லை. அது தமிழரசுக் கட்சி, சுமந்திரன், சிவஞானம் மட்டுமல்ல ஏனைய எல்லாக் கட்சிகளும் இணைந்து போராடியிருக்க வேண்டிய ஒரு போராட்டம். அது முழுத் தமிழ் இனத்துக்குமான ஒரு போராட்டம். எனவே கட்சி கடந்து இனமாகத் திரண்டு நடத்தியிருக்க வேண்டிய ஒரு போராட்டம். ஆனால் அவ்வாறு கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை என்பதுதான் தமிழ் அரசியலில் உள்ள மிகப்பெரிய சாபக்கேடு.

கட்சி கடந்து இனமாகத் திரள முடியாத அளவுக்குத் தமிழ் அரசியல் பரப்பு தொடர்ந்து சிதறிக் காணப்படுகிறது. 16 ஆண்டுகளுக்குப் பின்னரும் குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களின் பிரச்சினை மேலும் நீர்த்துப்போகக்கூடிய ஆபத்துகள் அதிகமாகத் தெரியும் ஓர் அரசியல் சூழலில் கூட, தமிழ் மக்களால் ஒன்றாகத் திரண்டு, ஓர் இனமாக ஒரு முக்கியமான விடயத்துக்கு எதிராகப் போராட முடியவில்லை. படைப் பிரசன்னத்தை அகற்ற வேண்டும் என்ற ஒரு போராட்டத்தில் மட்டுமல்ல, சில கிழமைகளுக்கு முன் ஐ.நா.வுக்கு ஒரு கூட்டுக் கடிதத்தை எழுத வேண்டும் என்ற விடயத்திலும் அவ்வாறு தமிழ்த் தரப்பானது, கட்சி கடந்து இனமாகத் திரள முடியவில்லை. அந்தக் கடிதத்தை எழுத வேண்டும் என்று முதலில் தொடங்கியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். அந்தக் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து அந்தக் கடிதத்தை எழுதிய பின் தமிழரசுக் கட்சியிடம் அதில் கையெழுத்திடுமாறு கேட்டன. அந்தக் கடிதத்தில் திருத்தங்கள் செய்வதாக இருந்தால் தமிழரசுக் கட்சி கேட்கும் திருத்தங்களைச் செய்வதற்குத் தாங்கள் தயாராக இருந்ததாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கூறுகின்றது. கடிதத்தின் முதல் வரைவை தமிழரசுக் கட்சியின் பிரதானிகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவிட்டு கிட்டத்தட்ட ஐந்து நாட்கள் பொறுத்திருந்ததாகவும் கஜேந்திரகுமார் ஓர் ஊடகச் சந்திப்பில் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் தமிழரசுக் கட்சி அந்தக் கடிதத்தில் கையெழுத்துப் போடுவதில்லை என்ற முடிவை ஐந்து நாட்களின் பின் அறிவித்தது. அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்லலாம். ஆனால் எல்லாவற்றையும் விட ஒரு முக்கியமான காரணம் உண்டு. அதுதான் ஏற்கனவே கூறப்பட்டது போல இந்த விடயம் இனமாகத் திரண்டு எதிர்கொள்ள வேண்டிய ஒன்று என்பது. கட்சி வேறுபாடுகளைக் கடந்து ஓர் இனமாக நின்று, ஐ.நா.வுக்கும், ஐ.நா.வில் முடிவுகளை எடுக்கும் நாடுகளுக்கும், ஒரு செய்தியைக் கூற வேண்டிய இடம் அது. ஆனால் இந்த விடயத்தில் தமிழ்க் கட்சிகள் இனமாகத் திரள முடியவில்லை. அதற்குப் பெரும்பாலும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்பு.

ஏனென்றால் தமிழரசுக் கட்சி தமது அரசியல் எதிரிகள் மீது மட்டுமல்ல தமிழ்ச் சிவில் சமூகங்கள் மீதும் ஒருவித வெறுப்போடு காணப்படுகிறது. இந்தக் கடிதம் எழுதும் நகர்வை முன்னெடுத்த சிவில் சமூகங்கள் தொடர்பாக தமிழரசுக் கட்சி ஒருவித ஒவ்வாமை உணர்வோடு காணப்படுகிறது. இந்த ஒவ்வாமை உணர்வு இப்பொழுதுதான் ஏற்பட்ட ஒன்று அல்ல. சிவில் சமூகங்கள் தனக்கு எதிராகச் செயற்படுவதாக தமிழரசுக் கட்சி நம்புகின்றது. சிவில் சமூகங்கள் தனது அரசியல் எதிரியாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் பலப்படுத்துகின்றன என்றும் அது நம்புகின்றது. எனவே சிவில் சமூகங்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து எடுக்கும் எந்த ஒரு முயற்சியும் தன்னைப் பலவீனப்படுத்துவதற்கு என்று அந்தக்கட்சி நம்புகின்றது.

தமிழ் மக்கள் பேரவையில் தொடங்கி தமிழ்ப் பொது வேட்பாளர் வரையிலும் சிவில் சமூகங்கள் தனது முதன்மையை சோதனைக்கு உள்ளாக்குவதாக தமிழரசுக் கட்சி பயப்படுகின்றது. அந்த அடிப்படையில்தான் ஐ.நா.வுக்கு எழுதப்பட்ட கூட்டுக் கடிதத்திலும் தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போட விரும்பவில்லை. இதைத் தமிழரசுக் கட்சியின் முடிவு என்றுகூடச் சொல்ல முடியாது. அது பெருமளவிற்கு சுமந்திரனின் முடிவுதான். அந்த முடிவை அவர் சிவஞானத்தையும் வைத்துக்

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.நிக்ஸன்

# அரசாங்கத்திற்குள் குழப்பம்!



ஜே.வி.பி.யை மையப்படுத்திய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குள் குழப்பங்கள் என சிங்கள நாளிதழ்கள், சிங்கள சமூக வலைத்தளங்களில் செய்திகள் - தகவல்களைக் காண முடிகிறது. ஆனால் அந்தத் தகவல்களில் உண்மையில்லை என அரசாங்கம் பல தடவைகள் மறுத்திருக்கிறது. தொடர்ந்தும் மறுதலித்து வருகின்றது.

இலங்கைத்தீவின் தேசியக் கட்சிகள் என அழைக்கப்படும் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஏறத்தாழ 76 வருடங்கள் ஆட்சி அமைத்திருந்தன. 2000 ஆம் ஆண்டின் பின்னர் கடந்த 24 வருடங்களில் இந்த இரண்டு கட்சிகளும் வேறு சிறிய கட்சிகளுடன் இணைந்தும் ஆட்சி அமைத்திருந்தன. 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ராஜபக்ச குடும்பத்தினர் உருவாக்கிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும், தேசியக்கட்சி என்ற அந்தஸ்தை பெற்று ஆட்சி அமைத்திருந்தது. ஆயினும் தேசியக் கட்சி என அழைக்கப்படும் இந்தக்கட்சிகளின் மூத்த உறுப்பினர்கள் பலர் கட்சி மாறி அமைச்சுப் பதவிகள் மற்றும் அரச திணைக்களங்களில் பதவிகளை வகித்திருந்தனர்.

76 வருட ஆட்சிகளின் போது அரச ஊழியர்களும் இந்தக் கட்சிகளின் மூத்த அமைச்சர்களினால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு நியமிக்கப்பட்ட அரச ஊழியர்கள் தான் தற்போதும் பதவிகளில் உள்ளனர். சிங்கள நாளிதழ் ஒன்றின் கணிப்பின் பிரகாரம், ஏறத்தாழ மூன்றில் இரண்டு பகுதி அரச ஊழியர்கள் இந்தத் தேசியக் கட்சிகளின் ஆட்சியின் போது நியமனம் பெற்றவர்கள். ஏனையவர்கள் கட்சி சாராமல் நியமனம் பெற்றவர்கள். அல்லது ஜே.வி.பி. எதிர்க்கட்சியாக இருந்தபோது அமைத்த தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களாக மாற்றம் பெற்றவர்கள் எனலாம்.

இவ்வாறான பின்னணியுடன் 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதவிக்கு வந்த அரசாங்கத்தின் பதவிக்காலம் ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்துநிலையில், உள்ளக முரண்பாடுகளை சந்தித்து வருவது உண்மைதான். இதனை சில மூத்த உறுப்பினர்களும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால், இந்த முரண்பாடு அல்லது குழப்பம் என்பது அநுர அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் நோக்கம் கொண்டதல்ல என்றும் அந்த மூத்த உறுப்பினர்கள் கற்பிதம் செய்கின்றனர்.

ராஜபக்சக்களின் அரசாங்கத்தில் அல்லது மைத்திரி - ரணில் அரசாங்கத்தில் எழுந்த உள்ளக முரண்பாடுகள் குத்துவெட்டுகள் போன்றதல்ல தமது அரசாங்கத்துக்குள் எழுந்துள்ள முரண்பாடுகள் எனவும் அவர்கள் செய்தியாளர்கள் சிலரிடம் மிகப் பக்குவமாக விளக்குகிறார்கள். அந்த விளக்கத்தில் உண்மை உண்டு. ஏனெனில் 76 வருடங்கள் தொடர்ச்சியாக ஆட்சி புரிந்த மேற்படி தேசியக் கட்சிகளின் மூத்த தலைவர்கள், அவர்களின் வாரிசுகள், தற்போது அரச கௌரவ பதவிகள் இன்றித் தவிக்கின்றனர்.

அத்துடன் ஊழல் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்யப்படுகின்றனர். அதாவது இவர்களின் அரச இராஜ்ஜியம் பூண்டோடு ஒழிக்கப்படும் ஆபத்துகளும் உள்ளன. இதனால் அநுர அரசாங்கத்துக்குள் குழப்பம் முரண்பாடுகள் என்று இவர்கள் கதை கட்டுகிறார்கள் என்பதைப் பகிரங்கமாக உணர முடிகிறது. அரசாங்கத்தின் மீது குறிப்பாக ஜே.வி.பி. மீது மக்களுக்கு தற்போது அதிருப்திகள் இருக்கலாம். ஜே.வி.பி.யின் தமிழ் உறுப்பினர்களுக்கு வாக்களித்த மக்களுக்கும் வெறுப்பு உண்டு. 13 ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என எதிர்பார்க்கவும் முடியாது.

ஆனால், இலங்கையின் பொருளாதார மீட்சி, ஊழல் அதிகாரத் துஷ்பிரயோகம் அற்ற ஆட்சி என்று நோக்கினால், தற்போதைக்கு அநுர அரசாங்கத்தை பதவி கவிழ்க்க சிங்கள மக்களில் அதிகமானோர் விரும்பமாட்டார்கள் என்பது கண்கூடு. ஆனாலும் மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் பலரும் மேற்படி தேசியக்கட்சிகளுடன் இணைந்து அரசாங்கத்தை விமர்சித்து நல் அபிப்பிராயங்களை குழப்பும் ஆபத்துகள் இல்லாமலில்லை.

அரசாங்கம் உள்ளக ரீதியாக எதிர்நோக்கும் முரண்பாடுகளை மூன்று வகைப்படுத்தலாம்.

1) அரசாங்கத்தின் திட்டங்களைச் செயற்படுத்தத் தயங்கும் அரச உயர் அதிகாரிகள். அதாவது ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளில் முன்னாள் அதிகாரிகள் கைது செய்யப்படுவதால், தற்போது பதவி உயர்வு பெற்ற உயர் அதிகாரிகள் பலரும் உரிய ஆவணம் இல்லாமல் அபிவிருத்தி திட்ட வரைபுகளில் கையொப்பமிடத் தயங்குகின்றனர். இதனால் பல திட்டங்கள் காலதாமதம் அடைகின்றன. கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள சமூக சேவைகள் திணைக்களத்துக்குச் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுடன் உரையாடியுள்ளார். சமுர்த்தி நிதி பல குடும்பங்களுக்கு வழங்கப்படாமல் தேங்கியிருப்பதை அறிந்து கொண்டார். அதற்கான காரணத்தை அநுர வினவியபோது, உரிய ஆவணங்கள் சரி பார்க்கப்படுவதால் கால தாமதம் ஏற்படுவதாக அதிகாரிகள் விளக்கியுள்ளனர். ஊழல் அதிகாரத் துஷ்பிரயோகம் ஆகியவற்றுக்கு இடமளிக்கக் கூடாது என்ற அரசாங்கக் கொள்கையினால், இவ்வாறு காலதாமதம் ஏற்படுவதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சமுர்த்தி நிதியை வழங்க கால தாமதம் ஏற்பட்டால், மக்கள் அரசாங்கத்தின் மீது வெறுப்படைவார்கள் அல்லவா? என அநுர பதிலுக்கு கேள்வி எழுப்பியிருக்கிறார். ஒரு வகையில் அதிகாரிகளின் விளக்கமும் அநுரவின் கேள்வியும் நியாயமானது தான். இதேபோன்றுதான் ஏனைய அரச திணைக்களங்களில் மக்கள் சேவைக்கான ஏற்பாடுகள் கால தாமதமடைந்திருக்குமோ என்று அப்போது அநுர உணர்ந்திருக்கலாம். உண்மை அதுதான் என்கிறார்கள் சில உயர் அதிகாரிகள்

2) பிரதமர் ஹரிணி தொடர்பான உள்ளக முரண்பாடுகள். குறிப்பாக ஹரிணி, அமெரிக்க இந்திய ஆதரவுக் கொள்கை உடையவர். இதனால் அநுரகுமார திஸாநாயக்க, ஹரிணியைநன்கு பயன்படுத்துகிறார். இந்தோ - பசுபிக் விவகாரம் உள்ளிட்ட புவிசார் அரசியல் போட்டிச் சூழலில் மேற்கு - ஐரோப்பிய நாடுகளுடன் உறவைப் பேண வேண்டிய அவசியம் உண்டு. இந்தியா ஊடாக இந்த உறவை சமநிலை செய்கிறார் அநுர. அதாவது ரஷ்ய - சீன கூட்டுக்குள் இந்தியா இருக்கிறது. அதேநேரம் மேற்கு - ஐரோப்பிய நாடுகளுடன் குறிப்பாக அமெரிக்காவுடன் இந்தியா உறவைப் பேணுகிறது. இந்திய அரசின் இந்த இரட்டை வெளியுறவுக் கொள்கையை, பிரதமர் ஹரிணியை மையப்படுத்தி, அநுர இலங்கையின் பொருளாதார நிலைமைகளைச் சீர்ப்படுத்தும் உத்திகளை கையாளுகிறார்.

குறிப்பாக ஈழத்தமிழர் விவகாரத்தை ஜெனிவாவில் இருந்து முற்றாக நீக்கம் செய்ய அல்லது போர்க்குற்றங்கள் தொடர்பான உள்ளக விசாரணைப் பொறிமுறையை உருவாக்க, இந்தியா ஊடாக மேற்கு - ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்பு அநுர அரசாங்கத்துக்கு அவசியமாகிறது. இதன் காரணமாக ஹரிணி மற்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோரை அநுர, கனகச்சிதமாகப் பயன்படுத்துகிறார். ஆனால் அநுரவின் இந்த உத்தியை ஜே.வி.பி.யின் அடிப்படைக் கட்டமைப்பு அதாவது ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்கள் புரிந்துகொள்ள மறுக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் ஹரிணி போன்ற உறுப்பினர்கள் மீது சந்தேகப்படுகின்றனர்.

3) அரசாங்கச் செயற்பாடுகளில் பெரியளவு மாற்றங்கள் ஏற்படாமையினால், ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்கள் அதாவது அரசாங்கத்தில் எந்த ஒரு பதவியிலும் அங்கம் வகிக்காமல் ஜே.வி.பி.யின் அடிப்படைக் கொள்கையை மாத்திரம் வடிவமைத்து வரும் உறுப்பினர்கள் மனதுக்குள் முணுமுணுக்க ஆரம்பித்துவிட்டனர். தேர்தல் பரப்புரைகளில் வாக்குறுதி வழங்கியதன் பிரகாரம், உடனடியாக அநுரகுமார திஸாநாயக்கா செயற்படவில்லை என அவர்கள் உள்ளக ரீதியாக குற்றம் சுமத்த ஆரம்பித்துள்ளனர். ஆனால் "இலங்கை ஒற்றையாட்சி அரசு" என்ற கட்டமைப்பும் அதன் யாப்பும் சட்டங்களும் மற்றும் புவிசார் அரசியல் பொருளாதார போட்டிச் சூழலும் உடனடியாக இடம் கொடுக்காது என்ற அரசியல் தன்மை (Nature of Politics) பற்றி அநுரவினால் அவர்களுக்கு விளக்கம் கொடுக்க முடியவில்லை போல் தெரிகிறது. ஆகவே எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மேற்கொண்ட விமர்சனங்களை இலங்கை அரசு என்ற கட்டமைப்பில் இருந்து கொண்டு தாம் நினைத்தபாட்டுக்கு செம்மைப்படுத்த முடியாது என்ற உண்மையை அநுர புரிந்து கொண்ட அளவுக்கு, ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்களால் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதை பிரதான எதிர்க்கட்சிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றன.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தற்போது அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுத்துள்ளது. ஆனால் அது பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளாமல், கொழும்புத் துறைமுக வளாகத்துக்குள் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி பற்றிய செய்திகளுக்கு அரச ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏனெனில் இன அழிப்புக்கான சர்வதேச நீதி என்று புலம்பெயர் தமிழர்களும் வடக்கு - கிழக்கில் தமிழ்த்தேசியக் கட்சிகள் சிவில் சமூக அமைப்புகளும் ஜெனிவாவுக்கு கடிதம் எழுதி வரும் பின்னணியில், இலங்கையின் கடந்த கால ஆட்சியாளர்களினால் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் நடந்துள்ளன என்பதைக் காண்பிக்க அரசாங்கம் திட்டம் வகுக்கிறது.

குறிப்பாக 1987/1988 ஆம் ஆண்டுகளில் ஜே.வி.பி. இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களைக் கையில் எடுத்துள்ளார் அநுர. அதாவது ஜே.ஆர், பிரேமதாஸ, சந்திரிகா, மஹிந்த, கோத்தாபய, ரணில் ஆகியோரும் மற்றும் சில படை உயர் அதிகாரிகளும் 76 வருட ஆட்சியில் மாறி மாறி அதிகாரத் துஷ்பிரயோகம், ஊழல் மோசடியுடன், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையும் புரிந்துள்ளனர் என்பதை நிரூப்பதே, அநுரவின் சமீபகால உத்தியாக மாறியுள்ளது. இந்த உத்தியின் மூலம் தமக்கு வாக்களித்த மக்களைச் சமாளிக்க முடியும் என அநுர நம்பக்கூடும். ஆனால் ஈழத்தமிழர்கள் 1949 இல் இருந்து தமக்கு எதிராக இன அழிப்புக் கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதை நிறுவுவதற்கு முற்படுகின்றனர். மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்பது வேறு வகையானது எனவும் ஈழத்தமிழ் தரப்பு வியாக்கியானம் செய்கிறது. இவற்றை மையமாகக் கொண்டு அநுர கையாண்டு வரும் அரசியல் காய் நகர்த்தல்களை ஜே.வி.பி.யின் தேசிய சபை புரிந்து கொள்ள மறுக்கிறது. இதன் காரணமாக எதிர்க்கட்சிகள் பிரசாரம் செய்வது போன்று அரசாங்கத்துக்குள் முரண்பாடுகள் எழுந்து ஆட்சி பலவீனமாகும் ஆபத்து ஏற்படலாம்.

இந்தப் பின்புலத்தில், அநுரவுக்கு மூன்று தெரிவுகள் மாத்திரமே உண்டு.

1) அடுத்த மாதம் நிறைவேற்றப்படவுள்ள ஜெனிவாத் தீர்மானத்தை முற்றாக நிராகரித்து, இலங்கை அரசு என்ற கட்டமைப்பை புனிதப்படுத்தி சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுதல்.

2) ஊழல் மோசடி அதிகாரத் துஷ்பிரயோகம் என்ற அடிப்படையில் மாத்திரம் ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் சிலரையும் அவருடைய ஆதரவாளர்கள் சிலரையும் கைது செய்தல். அதேநேரம் தற்போது பதவியில் உள்ள உயர் அதிகாரிகள் அச்சமின்றிப் பணியாற்றக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்குதல்.

3) இலங்கையின் மூத்த இராஜதந்திரிகள் மூலம், ஜே.வி.பி.யின் தேசிய சபை உறுப்பினர்களுக்கு சமகால உலக அரசியல் ஒழுங்கு பற்றி விளக்கம் கொடுத்தல். இங்கே ஈழத்தமிழர் விவகாரம், மேலும் பல ஆபத்துகளை எதிர்கொள்ளும் என்பது மாத்திரம் தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரதி தேவி

ஆனந்தி

போரின் கவிதை 25



அம்மாவின் பிதற்றல்
ஓய்ந்தபாடில்லை..
கண்களை வெட்டி முழித்தாள்...
பயத்தின் உச்சத்தில் இருந்து
விழுந்து உருவங்கள்
அடிபட்டதால் கைகள்
நடுங்கிக்கொண்டிருந்தன...

இந்த உயிரைக் காப்பாற்ற
நாற்பது வருடங்களுக்கு மேலாக
போராடுகின்றாள்...
பக்கத்து வீட்டில் கரும்புலிகளின்
பலத்த குண்டு சிதறி...
இடிபாடுகளுக்குள் சிக்கி மீண்டு..
இறந்து பிறந்தாள்.

இராணுவச் சீருடைக்கும்
சப்பாத்துக் கால்களுக்கும் பயந்து
ஊரைவிட்டு ஓடி
இந்தியாவுக்குள் புகுந்து
அகதியாக அலைந்து மீளக்குடியேறி...

ஒரே இரவில் மூடைகளோடு ஓடி...
யாரையும் தெரியாமல்
ஐந்து பிள்ளைகளையும்
பெற்ற தாயையும் விசேட தேவைகொண்ட
உடன் பிறப்பையும் கொண்டு
நாவற்குழி, பளை, வன்னியென்று
வரிசையாகத் திரிந்து...
கழுத்தடி நீரில் தப்பித்து வந்து
மீண்டும் குடியேறி.. இந்த
உயிருக்காகப் பயந்து...
பிள்ளைகளை வெளிநாடு அனுப்பி..
எங்கள் கண்முன் வேண்டாம்
கண்காணாத தேசத்தில்
உயிரோடு இருங்கள் என்று
காலத்தை வென்று..
பிள்ளைகளைக் கரைசேர்க்க..
மனதைக் கல்லாக்கியவள்.

இடிந்து கிடந்த வீட்டையும்
இடியாத வானத்தையும்
இரவுகள் ஒவ்வொன்றிலும்
பார்த்து மூச்சு முட்டி
அழுது அழுது ஓய்ந்த காலங்கள்!
இந்த உடம்பில் உயிரைத் தக்கவைக்க
கோவில்கள்... பிரார்த்தனைகள் ....
பிள்ளைகள் தமக்கான வாழ்வை
ஒழுங்கமைத்துக் கொண்டனர்...
யாரையும் போர் காவு கொள்ளாமல்
காப்பாற்றி விட்டாள்......

காலத்தைக் கலங்கடித்து..
ஓடி ஒளிந்து வாலிபங்களை யாரும்
வேட்டையாடி விடாமல் பாதுகாத்து
குருவிக் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள்
பொத்திவைத்திருந்தவள்..

தேனீர் குடிக்க சீனி கேட்டுத்
தெருத்தெருவாகத் திரிந்தவள்..
பாண் வாங்கிய காசுக்கு
பல ஆண்டுகள் காத்திருந்து
கடன் அடைத்தவள்..
தாய் என்பதற்கு அவள்..
தனித்துவமானவள்..

பொறுப்பறியாத கணவனிடம்
அடுப்பெரிக்கவென
ஆதாரம் கேட்டு மௌனமானவள்.
ஆனால் மரணமென்றால் மட்டும்
அவளுக்கு மிகவும் பயம்...
காலன் வரும் போதெல்லாம்
துரத்திக் கொண்டிருப்பவள்.
ஐம்பது ஆண்டுகளாக
போரின் வரலாறோடு
நெருங்கி வாழ்ந்தவள்......

குச்சியிட்ட காதுத்துவாரங்கள்..
தங்கப்பவுணாக மின்னின..
கழுத்துக்கும் கைகளுக்கும்
மினுமினுப்பாகத் தொங்கின.
வாடகைக்கு இருந்த வீடு
சீவியத்துக்கும் உரித்தானது..
வசதிகள் அனைத்தும்
கொடுக்கப்பட்டன..அவளுக்காக..

ஆனால் அவள் உடல்நலம்
வெகுவாக அல்லாடியது...
எப்போதும் மருத்துவமனை ...
அம்புலன்ஸ் பயணம்..
மெல்ல மெல்ல ஏதோ படரத்
தொடங்கியது
எழுமாற்றான பரிசோதனைகள்
மருத்துவர்களின் பணப்பைகள்
நிரம்பின..
காற்றுப் புகமுடியாத கண்ணாடிப்
பெட்டிகளில் கறுப்புத் துணி
கொண்டு மூடுவது போல இருக்கும்
அவளுக்கு...

பல நாள் பைத்தியமாக அலைய
விட்டார்கள்
அதுவா?? இதுவா?? என்று
ஒன்றன் பின் ஒன்றாக
பரிசோதனையும் பணக்கறப்புகளும்
அம்மாவைக் காப்பாற்றப் பணம்
தண்ணீராகக் கரைந்தது..
புற்றுநோயை எத்தனை இலகுவாகச்
சொல்லிவிட்டார்கள்! போரின்
விளைவு!
போரின் [illegible]

தின்றதாம்...
குண்டு வீச்சுக்கள் நிலக்குழிக்குள்
விழுந்து... மண்ணோடு சேர்ந்து
நீரோடு சேர்ந்து..
சோறோடும்.. கறியோடும்..
சேர்ந்து.. நஞ்சாகி புற்றுநோய்
நெஞ்சை நசிக்கிறதாம்..
இது விஞ்ஞானம் பேசும் கதை!

கப்பியிலும் துலாவிலும்
தண்ணீர் அள்ளி... கைகளால்
ஆடை துவைத்து
வெள்ளைச் சீருடை கலையாமல்
பள்ளிக்கனுப்பி..
கைகளால் தேங்காய்ப் பூ பிழிந்து
விறகடுப்பில் சோறாக்கி..
பள்ளியால் வரும் போது
பசியோடு வரும் எமக்காய்..
எத்தனை பேரிடம் கடன்பட்டு
சோறாக்கியவளுக்கு.. இன்று
உயிர் கொல்லும் நோய்!

எந்த ஆடம்பரமுமில்லாது..
ஒப்பனை இல்லாத முகத்தோடு
ஊராரைக் கவர்ந்து..
கடின உழைப்புக்கு பெயர் போன
இவளைக் காலம் ஏன் தண்டிக்கிறது?

அடுப்புக்கரியால் மண்சட்டி
கழுவி..தேங்காய்த் தும்பின் வாசத்தில்..
நெய் தடவி..ஊர் மணக்க ஊற்றிய
தோசைக்கும்... வாழ்வின்
மேலான ஆசைக்கும் போர்
கொடுத்த பரிசு புற்றுநோய்!

மாவிடித்துக் களைத்து..
ஐந்து பிள்ளைகளுக்கு தான்
பசித்திருந்தும்

முலைப்பால் சொரிந்து..
வாழ வீடின்றி அலைந்து
வசதியின்றி வெறுந்தரையில் உறங்கி
பணி செய்தவள்...
பாதித்தேங்காய்க்காய்
பசிவயிற்றோடு பரிதவித்தாள்..
நூறுகள் இலட்சங்களாக

மாறிய காலத்தில் நின்று..
சேர்த்தது முழுவதையும் செலவு
செய்கிறாள்..
குண்டுகளின் இரசாயனம்
தின்றதால் வந்த நோயை..
குறைப்பதற்கு எரிக்கும்
இரசாயனம்
உருக்குகிறது... அவளை!

ஆயுதம் விற்றவரின்
பணப்பைகள் நிரம்பிமுடிய
மருத்துவரின் பணப்பையை
கனக்கச் செய்யும்
புற்றுநோய்... போர் தந்த
பிரமாண்டமான பரிசு..
சிறந்த தாயாக இருந்தவளுக்கு
போர் தன் பரிசைக்கொடுத்திருக்கிறது..
முடிந்தும் அழியாத அதன் பயணம்!

போரின் காலத்தில் புதையுண்ட
மக்கள் பூமியின் கீழ் சிதைய....
பூமியின் மேலே நோயின் நெருப்பு
பற்றிப் பிடிக்கும்
பொல்லாத தேசத்தில்
ஏன் பிறந்தோம்?

ஏழைகளை வருத்தி
போக்கிடமின்றி அலையவைத்து..
சொத்துக்கள் தொலைத்து ..
உயிர்களை இழந்து...
சாவும் காலத்திலும்...
துன்பப்பட்டு செத்துமடியும்
சாபத்தை எமக்கு...
யார் எழுதிவைத்தார் ?

உடல் எரியும் மருந்துகள்
உருக்குலைக்கும் மனநிலை...
மீண்டும் வாழலாம் என..
ஓய்வெடுக்கும் வயோதிபரை
நோய் தின்னும் காலத்தை..
ஏன் தந்தாய்?
போய்த்தொலைந்து போனாலும்
தொடரும் நம் போராட்டம்
தாய்மைகளைக் காவுகொள்ள
கர்ப்பத்தில் மார்பகத்தில்..
எல்லாம் அரித்து...
போர் தின்ற மிச்சத்தை


தின்றொழிக்கும் ...உடலெல்லாம்
புற்றாகி உயிர் குடிக்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
24 ஓகஸ்ட் 2025

# யாழ்ப்பாணத்து ஆகாரப் பாரம்பரியம்;

## 'மாறுபாடில்லா உண்டி' நுலை முன்வைத்து ஒரு பார்வை




மருத்துவர் திருமதி கயலினி சிறிகாந்தன்
*நல்லூர் சமூக மருத்துவ உத்தியோகத்தர்*

பசி என்பது ஓர் உயிரியல் தூண்டல்,எல்லா உயிரினங்களிடமும் நிலவும் பொதுவான பண்பியல்பும்கூட. பசி உணர்வின் எதிர்வினையாக அமைவது உணவு. எல்லா உயிரினங்களும் உணவினை உண்ணுதலை தங்களின் வாழ்வின் ஒரு பகுதியாக பழக்கப்படுத்தியுள்ளன. ஆனால் மனிதன் மட்டும் உணவினைப் பதப்படுத்தி சமைத்து உண்ணும் நடைமுறையினை ஏற்படுத்திக்கொண்டுள்ளான். இதுவே உணவின் உடலியல் தேவையினைக் கடந்து பண்பாட்டின் பரிமாணமாக வியாபித்துள்ளது.

உலகில் உள்ள ஒவ்வொரு பகுதியினரும் உணவினைத் தங்களின் பண்பாட்டு நடைமுறையின் வழியாக இனங்காண்கின்றனர். இவை அனைத்திற்கும் பின்புலமானதாக குறிப்பிட்ட மக்களின் உணவு தொடர்பான உடல், உள, சமூக, ஆன்மிக ஆரோக்கியத்தின் மீதான ஈடுபாட்டினைப் புரிந்துகொள்ளமுடியும்.

இந்நிலையில் சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மனின் 'மாறுபாடில்லா உண்டி' எனும் நூல் தமிழர் பண்பாட்டின் உணவுப் பண்பாட்டு பாரம்பரியத்தின் தனித்துவத்தினையும் அதன் வழியாகக் கட்டமைக்கப்படும் ஆரோக்கியமான வாழ்வின் செல்நெறிகளையும் எமக்குத் தருகின்றது.

உணவுப் பாரம்பரியம் என்பது பிராந்திய தனித்துவமிக்க ஒன்றாகும். உலகின் அனைத்துப் பிராந்தியங்களிலும் உணவுக்கான அடிப்படை ஆதாரமான தானியங்களும் ஏனைய பிறவும் கிடைப்பதில்லை. அவை குறிப்பிட்ட பிராந்தியத்தின் காலநிலை, தட்ப வெப்ப மாற்றங்களுடன் இணைந்து காணப்படுகின்றன. இந்நிலையில் இலங்கையில் தமிழர் தொன்று தொட்டு பாரம்பரியமாக வாழ்ந்துவரும் ஒரு பிரதேசமாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது. தமிழர் பாரம்பரியத்தின் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர் பாரம்பரியத்தின் முதன்மையான ஒரு பண்பாட்டு அம்சமாகக் காணப்படுவது உணவு நடைமுறையாகும். நீண்ட நெடிய உணவுப் பண்பாட்டுப் பாரம்பரியத்தினைப் பேணி வருகின்ற யாழ்ப்பாணத்து மக்களிடையே நிலவி வருகின்ற உணவுப் பண்பாட்டின் தனித்துவமான விடயங்களை ஆசிரியர் தன்னுடைய "மாறுபாடில்லாத உண்டி" எனும் இந்நூலில் முன்வைத்துச் செல்கின்றமை இங்கு கவனிக்கத்தக்க.

பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியம் முதல் இன்றைய நவீன இலக்கியங்கள் வரையாக உணவு பற்றிய பல்வேறுபட்ட கருத்துகளை உள்ளடக்கியுள்ளன. இந்நிலையில் ஆசிரியர்

*'மாறுபா டில்லா உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபா டில்லை உயிர்க்கு'*

எனும் திருக்குறளின் மருந்து எனும் அதிகாரத்தில் வரும் குறட்பாவின் முதன்மை அடிகளை முன்வைத்து தனது நூலுக்கான தலைப்பினை இட்டுள்ளார். எவ்வித தீங்கும் இல்லாத அமிர்தம் போன்ற உணவாகிலும் அதனை அளவோடு உண்பவன் உடலுக்கு நோய்கள் எற்படாது என்பது மேற்குறிப்பிட்ட குறட்பாவின் பொருள்.

இன்று மக்கள் எதிர்நோக்கும் உடல்சார்ந்த நோய்களுக்கு முதன்மையான அடிப்படை மக்கள் தாம் உண்ணும் உணவு பற்றிச் சிந்திக்கத் தவறுவதே ஆகும். எமது முன்னோர்கள் தங்களது உணவின் தன்னமைகளை அனுபவத்தின் வழிக்கொண்டு அவற்றினை தமது உணவாகப் பயன்படுத்திக் கொள்ளும் வழிவகைகளை எமக்குரைத்துள்ளனர். ஆனால் இன்று உலகமயப்பட்டுச் செல்லும் நுகர்வுப் பண்பாட்டின் விளைவுகளால் எம்மிடையே நிலவும் உணவுப் பழக்க வழக்கங்கள் பெரிதும் மாற்றத்திற்குள்ளாவதுடன் அவற்றின் விளைவான நோய்களும் எமக்கு ஏற்படுகின்றன.

இந்நிலையில் மாறுபாடில்லா உண்டி எனும் நூலின் வழியாக ஆசிரியர் சுதர்மன் எமக்குப் பாரம்பரியமான உணவின் தனித்துவங்களையும் அவற்றிலுள்ள மறைந்துள்ள போசணைகளையும் அவற்றினை தயாரிப்பதற்கான பாரம்பரிய வழிமுறைகளையும் மிகவும் எளிமையாக எழுதியுள்ளார்.

இந்நூலானது "எழுநா" நிறுவனத்தின் வெளியீடாக வந்துள்ளது. இந்நூலில் 14 அத்தியாயங்கள் உள்ளன. இவற்றில் மாறுபாடில்லா உண்டி, யாழ்ப்பாணப் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்கள், பசியும் பிணியும் போக்கும் அரிசி எனத் தொடங்கி யாழ்ப்பாணத்தின் தனித்துவமான உணவுப் பழக்கவழக்கங்களை முதன்மைப்படுத்தும் வகையிலான 14 கட்டு ரைகள் உள்ளடங்கியுள்ளன.

முதலாவது அத்தயாயம் மாறுபாடில்லா உண்டி உணவின் தனித்துவத்தின் சிறப்பியல்புகளை சித்த மருத்துவ நோக்கில் விளக்குவதுடன் அதனைத் தொடர்ந்து வரும் யாழ்ப்பாணப் பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்கள் என்னும் அத்தியாயம் யாழ்ப்பாண மக்களின் உணவு நடைமுறையின் ஒழுங்கினை சித்த வைத்திய பாரம்பரிய நூல்களினை மேற்கோள்காட்டி விளக்கிச்செல்கின்றது.

அத்தியாயம் மூன்று முதல் அத்தியாயம் ஒன்பது வரையாக உள்ள அனைத்துக் கட்டுரைகளும் யாழ்ப்பாணத்து பாரம்பரியமான அரிசி, தானிய மற்றும் சிறுதானிய, எண்ணெய் வகை, கிழங்கு மற்றும் இலைவகைகள் சார்ந்த உணவுகளின் தனித்துவமான பண்பியல்களையும் அவற்றினைத் தயாரிக்கும் பாரம்பரிய முறைகளையும் விவரிப்பதுடன் அவை தொடர்பாக சித்த மருத்துவ நூல்கள் கூறுவனவற்றையும் எமக்குத் தருகின்றது.

மேலும் அத்தியாயம் 10 இல் பாலும் பால்சார்ந்த உணவுகளும் பற்றி ஆசிரியர் விரிவாகவே விளக்கிக் கூறுகின்றார். குறிப்பாக நாம் அன்றாடம் பயன்படுத்தும் பசுப்பாலும் அதுசார்ந்த ஏனைய தயாரிப்புகள். எருமைப்பால், வெள்ளாட்டுப்பால் போன்வற்றிலுள்ள போசணைக் கூறுகளையும் அவற்றின் தனித்துவங்களையும் எளிமையான முறையில் விளங்கிக்கொள்ளும் வகையில் இந்தக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் சைவ உணவுக்குள்ள முக்கியத்துவம் போன்றே அசைவ உணவுக்கும் உண்டு. இந்நிலையில் நூலாசிரியர் சுதர்மன் அசைவ உணவுகள், ஈழத்துக் கடலுணவுகள் தொடர்பாக அத்தியாயம் 11 மற்றும் 12 இல் விவரித்துள்ளார். யாழ்ப்பாணத்தவர்கள் வேறுபட்ட ஆட்டு வகையினங்களை இறைச்சியாகப் பயன்படுத்தி வருகின்றனர். அவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட கனிமத் தாதுக்களைக் கொண்டவை. இவையனைத்தினையும் ஆசிரியர் விரிவாகவே பதிவுசெய்துள்ளார். இவ்வாறே வேறுபட்ட இறைச்சி வகைகளையும் கடல் உணவுகளையும் அவற்றில் நிலவும் சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளையும் விவரித்துச் செல்கின்றார்.

உணவின் தயாரிப்பிலுள்ள சுவையூட்டிகள் முதன்மையானவை. இன்று நாம் பயன்படுத்தும் அதிகமான சுவையூட்டிகள் பல்வேறுபட்ட பக்க விளைவுகளைக் கொண்டன. எனினும் பாரம்பரியமாக தமிழர்கள் பயன்படுத்திவருகின்ற உணவின் சுவையூட்டிகள் உணவின் சுவையினை மட்டுமன்றி உடலின் ஆரோக்கியத்திற்கும் அடிப்படையானவை. தமிழரிடையே பயன்படுத்தப்படும் மிளகு முதல் வெந்தயம் வரையாக உள்ள அனைத்து சுவையூட்டிகளையும் ஆசிரியர் மிகச் சுருக்கமாக விவரிக்கின்றார்.

இறுதியாக ஆசிரியர் சுதர்மன் யாழ்ப்பாணத்து பழவகைகளையும் பனைசார் உணவு முறைகளையும் விவரிக்கின்றார். யாழ்ப்பாணத்தில் கிடைக்கும் முதன்மையான பழவகைகளான வேறுபட்ட வாழைப் பழங்கள், ஏனைய பழவகைகளான மாதுளம் பழம், மாம்பழம் போன்ற இன்னோரன்ன பழவகைளில் உள்ளார்ந்தமாகக் காணப்படும் ஊட்டச்சத்துகளை வெளிப்படுத்துவதுடன் யாழ்ப்பாண உணவுப் பண்பாட்டிற்கு தனித்துவமாக உள்ள பனைசார் உணவுகளும் அவற்றின் மருத்துவக் குணங்களையும் இங்கு விவரிக்கின்றார்.

மருத்துவர் சுதர்மன் இந்நூலுக்கு முன்னர் எழுதிய "ஆகாரமே ஆதாரம்" எனும் நூலானது அனைத்துத் தரப்பினரிடமும் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பதுடன் அதன் வழியாக அவருக்குக் கிடைத்த அனுபவப் பகிர்வுகள் 'மாறுபாடில்லா உண்டி' எனும் இந்நூலை எமக்குத் தந்துள்ளது. இந்நூலானது தனியே உணவின் போசணையை மட்டுமன்றி அவற்றின் வழியாக வெளிப்படும் யாழ்ப்பாண உணவுப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் தனித்துவங்களை எமக்குத் தருகின்றது.

## கடையடைப்பு:

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சொன்னார்.அந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வேறு சிந்தனைகளும் வேறு அபிப்பிராயங்களும் உள்ளதாகத் தெரிகிறது.ஆனால் அவர்களுடைய குரல் வெளியே ஒலிப்பதில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சுமந்திரனின் பக்கம் நிற்கின்றார்கள் என்றிருந்தால் நடந்து முடிந்த கடையடைப்பு முழு வெற்றி பெற்றிருக்கும். ஏனென்றால் வடக்கு கிழக்கு தழுவிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரே கட்சி தமது கட்சிதான் என்று சுமந்திரன் அடிக்கடி கூறுவார்.அப்படிப் பார்த்தால் வடக்கு கிழக்கு தழுவிய ஒரு கடை அடைப்பை ஏன் முழுமையாக வெற்றிகரமாக நடத்த முடியவில்லை?

கடையடைப்பு முழு வெற்றி பெறவில்லை என்பதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களில் ஒரு பகுதியினர் கொண்டாடுவதாகத் தெரிகிறது.அது தவறு.அது கொண்டாடப்பட வேண்டிய விடயம் அல்ல. ஏனென்றால் ஓர் இனமாகச் சிந்தித்து,எல்லாருமாகச் சேர்ந்து போராட வேண்டிய ஒரு விடயம். கடையடைப்பு முழு வெற்றி பெறாததை வைத்து அரசாங்கம் தனது படைகளை விலக்கிக் கொள்ளாது என்று கூறப்படும் விளக்கம் குதர்க்கமானது. அதேசமயம் கடையடைப்பை சுமந்திரன் செய்கிறார் என்பதற்காக அவருடைய அரசியல் எதிரிகள் அது தோற்க வேண்டும் என்று பிரார்த்தித்ததோ அல்லது அது முழு வெற்றி பெறவில்லை என்பதைப் பார்த்து திருப்திபடுவதோ தமிழ் மக்கள் ஓர் இனமாகத் திரளமுடியாமல் இருக்கிறார்கள் என்பதைத்தான் காட்டுகின்றது. அதாவது கடந்த இரண்டு மாதங்களுக்குள் தமிழ் மக்கள் தாங்கள் ஓர் இனமாகத் திரள முடியாமல் சிதறிப் போய் இருக்கிறார்கள் என்பதனை இரண்டு தடவைகள் நிரூபித்திருக்கிறார்கள்.இதை மேலும் கூர்மையான வார்த்தைகளில் சொன்னால்,தமிழ் மக்கள் வெற்றிபெறத் தேவையான அடிப்படைத் தகுதியைப் பெறாத மக்களாகத் தொடர்ந்துமிருக்கிறார்கள் என்பதனை கடந்த இரண்டு மாதங்களுக்குள் இரண்டு தடவைகள் நிரூபித்து விட்டார்கள் என்றும் சொல்லலாமா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

42


ராதா மாமாவின் செத்த வீட்டுக்கு நானும் வரப்போறன் எண்டு ஒற்றைக்காலில நிண்டன். என்னை ஒருமாதிரிப் பிராக்காட்டிப்போட்டு அம்மாவும் அப்பாவும் போட்டினம். நான் பக்கத்து வீட்டாக்களோட நிண்டன். விடிஞ்சும் விடியாமலுமிருந்த கருக்கலுக்கை வந்து அம்மா எனக்கொருக்கால் முகங் காட்டிப்போட்டுப் போனதும் பிறகு அந்தியேட்டிக்கு நான் ராதா மாமா வீட்டை போனதும் எனக்கு இப்ப எண்ட மாதிரியிருக்குது.

ராதா மாமாவின்ர அந்தியேட்டிக்கு அடிச்ச கல்வெட்டு இப்பவும் எனக்கு ஞாபகமிருக்கு. அப்ப உந்தப் 'போர் கலர்' விளையாட்டுகளெல்லாமில்லை. எல்லாங் கறுப்பு வெள்ளை எண்ட 'ரூ கலர்' விளையாட்டுகள்தான். அந்தக் கல்வெட்டு வழமையைவிடக் கொஞ்சம் சின்னச் சைஸில வெள்ளை மட்டையில மேல் அரைவாசியில சாம்பல் கலர் அவுட்லைனில நடுவில கடும் செம்மஞ்சள் கலரில நெருப்பெரியிறமாதிரிப் படம் போட்டுக் கீழ் அரைவாசியில எழுத்துகள் வாற செற்றப்பில டிசைன் பண்ணியிருந்திச்சுது. இதில முக்கியமாக் குறிப்பிடவேண்டியது புலம்பல்தான். பொதுவாப் புலம்பல் எழுதிறதைத்தான் கல்வெட்டு எழுதிறதெண்டு சொல்லுவினம். இண்டைக்குப் பேனை பிடிக்கிறாக்களெல்லாம் புலம்பல் எழுதிறளவுக்கு அது வலுசீப்பாப்போச்சு. உதென்ன புலம்பல் எழுதிறது பெரிய வேலையே எண்டு கேக்கிறாக்களுமிருக்கினம். ஆனால் உண்மையிலேயே அது பெரிய வேலைதான்.

எங்கடையூரில கல்வெட்டு எழுதிறதுக்கெண்டே சில பேர் இருந்தவை. பண்டிதர் க.வீரகத்தி (க.வீ), பண்டிதர் வீ. மயில்வாகனம், பாட்டுக்காரன் சின்னத்தம்பி, ஆசி. தமிழகத்தான் (ஆசி தமிழகத்தானின்ர சொந்தப் பெயர் தம்பிராசா. இவர் பாட்டுக்காரன் சின்னத்தம்பியின்ர மகன். இவரின்ர வீட்டுக்குத் தமிழகம் எண்டு பெயர். அது தெடுத்தனையில இருக்கு. அதால இவர் தன்ரை பெயர் ஆசி தமிழகத்தான் எண்டு வைச்சிருந்தவர். இப்ப காலமாகிட்டார். இவருக்குப் பாரதி, பவநீதன், பாவரசன் எண்டு மூண்டு பொடியள். இதில பவநீதன் என்னோட ஒரே வகுப்பில விக்கினேஸ்வராக் கல்லூரியில ஒண்டாப் படிச்சவன்) இவையளிட்டக் குடுத்துக் கல்வெட்டு எழுதினாத்தான் அந்தியேட்டி வீட்டுக்காரருக்குப் பத்தியப்படும். மற்றது இன்னொரு முக்கியமான சங்கதி என்னவெண்டால் இந்தக் கல்வெட்டு எழுதிறாக்கள் ஊருக்குள்ளே இருக்கிறதால ஒவ்வொரு குடும்பத்தைப் பற்றியும் அவையளுக்கு வடிவாத்தெரியும்.


அதால ஒராள் செத்தால் அந்தாள் குடும்பத்திலயுள்ள மற்றாக்களோட என்ன மாதிரிப் புழங்கினவர் குடும்பத்துக்கு என்னென்ன செய்தவர் எண்டதெல்லாம் வடிவாத் தெரியும். இதையெல்லாம் வைச்சு நெஞ்சை உருக்கிற விதத்தில் புலம்பல் எழுதுவினம். பிறகு எழுதின புலம்பலைப் பாடுறதிலயும் விசயமிருக்கு. நெஞ்சை உருக்கிற மாதிரி அதைப் பாடவும் வேணும். அதுக்குமொராள் முடிசூடா மன்னனா எங்கடையூரில இருந்தவர். அவர்தான் நான் மேல குறிப்பிட்ட பாட்டுக்காரன் சின்னத்தம்பி, இவரைப் பற்றி ஊர்ப்புதினத்தில ஏற்கனவே சொல்லியிருக்கிறன். அவர் எங்கட அம்மாவுக்கு மாமன் முறை. பாட்டுப் பாடுறதில வலுவிண்ணன் எண்டதால அவருக்குப் பாட்டுக்காரன் எண்டு பெயர் வந்தது.

(தொடரும்)




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இருந்து கதைப்பம்

கோகுலராகவன்

# குழந்தை உள்ளம்

வாழ்வில் சங்கடங்கள் வரும்போது தப்பிக்கொள்வது மிகவும் கடினமான காரியம். சிலவேளை மனதை இறுக்கிக் கொண்டு நகர வேண்டிய சங்கடங்கள் உள்ளன. இந்தக் கட்டங்களில் எங்கள் இளகிய மனதைக் கூட இறுக்கி வைக்க வேண்டி வந்து விடும். ஒருநாள் வாகனத் தரிப்பிடம் ஒன்றில் என்னுடைய வாகனத்தில் கதவைத் திறந்து வைத்தபடி அமர்ந்திருந்தேன். மனைவியும் மகளும் யாழ். நகருக்குள் கடைக்குப் போய்விட்டனர்.

என்ன கடை? தெரியும்தானே, புடவைக்கடையைத் தவிர வேறெதற்குப் போவார்கள்.

இவர்களுக்குப் பின்னால் என்னால் "யாரடி நீ மோகினி "தனுஷ் மாதிரி இழுபடமுடியாது.

"நீங்கள் வரவேண்டாம்" என்று சொல்வதுதான் அமுதமொழியோ !

(மனைவி பெயர் அமுதினி )

"அப்பாடி" என்று அமர்ந்திருந்தேன்..

இந்த வேளை எனது வாகனத்தின் அருகே இன்னொரு விலை உயர்ந்த கார் தரிக்க வந்தது.காரில் ஓர் இளங் குடும்பம். கணவன் ,மனைவி, மூன்று வயது மதிக்கத்தக்க ஆண்பிள்ளை.

குழந்தை மிக அழகாக இருந்தான். கீழே இறங்குவதற்காக தான் இருந்த பக்கக்கதவை அந்த மனைவி திறந்தாள்.அவள் மடியில் குழந்தை இருந்தான்.

அப்போது கணவனின் குரல் சரமாரியாக எனக்குக் கேட்டது. யாரையோ கடுமையாகத் திட்டிக் கொண்டிருந்தான்.

அவன் யாரைத் திட்டுகிறான் என்பதை என்னால் சரியாகப் புரிய முடியவில்லை. மனைவியைத் திட்டுகிறான் எனவே நினைத்தேன். குடும்பச் சண்டையாக இருக்கலாம்.

பொதுவாக ஆண்களுக்கு இந்தப் பொருள் கொள்வனவு பிடிப்பதில்லை. பெண்களின் வசைமாரிக்கு பின்னரே புறப்படுவார்கள்.

இங்கும் அதே பிரச்சினைதான் என நினைத்துக் கொண்டேன். ஆனால் அவன் மனைவியைத் திட்டுவது போலவும் இல்லை.

அப்போ, யாரைப் பேசிக்கொண்டிருக்கிறான்?

அவன் குரல் கடுமையாகவே இருந்தது.

அவன் பார்வை குழந்தை மீதே நிலைத்திருந்தது.

அந்த அழகான தன் குழந்தையைத் திட்டுகிறானா?

குழந்தைக்கு இவன் திட்டுவது புரிகிற வயதில்லையே. மனைவி முகத்தில் புன்னகையோ, சிரிப்போ இல்லை.

இறுகியே கிடந்தது.

நிலைமை கடினமானதாகவே இருந்தது.

கணவனின் திட்டுதல் குழந்தையை நோக்கியே இருப்பதாகவே எனக்குப் பட்டது.

பொதுவாக எனக்கு குழந்தைகளை யாரும் திட்டுவது பிடிக்காது.

ஆனால் இங்கு நான் எதுவும் பேச முடியாது.

அறியாதவர்கள்,நான் கதைக்கப் போய் இன்னும் கலவரமாக மாறலாம்.

முகத்தை எதுவும் புரியாத மாதிரி வைத்து கொள்கிறேன். என்னத்துக்குத் திட்டுகிறான் என்பதும் எனக்குப் புரியவில்லை.

இங்கே எனக்கு ஏற்பட்ட தர்மசங்கடத்தைச் சொல்கிறேன்.

எனது வாகனக் கதவும், தாயும் குழந்தையும் இறங்கும் கதவும் ஒரே நேராக இருக்கிறது.

தாய் இறங்கும்போது கைகளில் இருந்தபடி அந்தக் குழந்தை தகப்பனின் திட்டுகள் எதையும் புரியாத நிலையில் என்னைப்பார்த்து,

அழகான புன்னகையுடன் "மாமா"எனக் கூப்பிடுகிறான்.

இப்போது நான் என்ன செய்வது?

குழந்தையைப் பார்த்து புன்னகைப்பதா?

கைகாட்டுவதா? ஹலோ சொல்வதா?

இதில் நான் எதைச் செய்தாலும் அந்தத் தகப்பனின் கோபம் அதிகரிக்கலாம்.

"யாரடி இவன்? உன்ரை பிள்ளைக்கு எப்படித் தெரியும் எப்படித் தெரியும்" என்று சத்தம் போடலாம். அங்கிருந்த சிக்கல் நிலை மேலும் வலுவடையலாம்.

ஆனால் ஒரு குழந்தை "மாமா" என அன்பாகக் கூப்பிடும்போது ஒரு சிறு புன்னகை கூட காட்டாமல் எப்படி இருப்பது.?

நானோ தாய்க்குத் தெரியாமல் இரகசியமாக குழந்தைகளுக்கு கைகாட்டும் பேர்வழி.

பாடசாலையில், தரம் ஒன்று பிள்ளைகளைத் தூக்கிச் சென்று வகுப்பில் விட்டிருக்கிறேன்.

அவர்கள் அன்பில் மூழ்கித் திளைத்திருக்கிறேன்.

இங்கு என்ன செய்வது?மனதை கல்லாக்கிக் கொள்கிறேன்.தாய் இப்போது கீழே இறங்கி விட்டாள்.

குழந்தை அவளின் தோளால் எட்டிப் பார்த்து

மீண்டும் "மாமா" எனக் கூப்பிடுகிறான்.

'என்னடா இவன் தகப்பனை என் மீது பாயவைக்காமல் விடமாட்டான் போல இருக்கிறது'

என் வாகனக் கதவைச் சாத்திவிடுவோமா?

தகப்பன் கீழே இறங்கிக் கிட்ட வருகிறான்.

நான் எனது பார்வையை எங்கோ திருப்பிக் கொள்கிறேன்.

தகப்பன் இவர்களிடம் எதுவும் பேசாமல் முன்னே நடக்க ,தாய் பின்னே குழந்தையுடன் போகிறாள்.

இந்தக் குழந்தையோ மீண்டும் தாயின் தோளால் எட்டிப் பார்த்து இப்போது போதாக்குறைக்கு"மாமா பாய்" என்கிறான்.

நான் எங்கே குழந்தைக்கு 'பாய்' காட்டுவது ?தகப்பன் திரும்பி வருகிறானா? என்ற பயத்தில் தகப்பனையே பார்க்கிறேன்.

அவனோ எந்தவித சலனமுமில்லாது வேகமாகப் போகிறான்.

ஒரு குழந்தை என்னை "மாமா" என்று கூப்பிட்டு நான் மௌனமாக இருந்தது இதுவே என் வாழ்வின் முதற்தடவையாக நிகழ்கிறது.


இது நிகழ்ந்து கிட்டதட்ட மூன்று வருடங்கள் இருக்கலாம்.

என் மனதை விட்டு அகலாத சம்பவமாகி விட்டது.

குழந்தைகளை குழந்தைகளாக அவர்களின் இருபது வயது வரை கருத வேண்டும் என்பதே என் நிலைப்பாடு.

எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்




## ஜோசியரின் சாபம்

அதிகமான அரசியல்வாதிகளுக்கு ஜோசியம் மீது நம்பிக்கை உண்டு. அவர்களுள் ரணிலும் ஒருவர். ஆனால்,அதை வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். 1994 இல் ரணிலுடன் இருந்த சில ஜோசியர்கள் ஒரு விடயத்தை ரணிலிடம் கூறினார்கள். 'இளம் வயதில் ஜனாதிபதியாகும் வாய்ப்பு உங்களுக்கு அறவே இல்லை. முதிய வயதில் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அது குறுகிய காலம் மட்டுமே. அதன் பின் அறவே உங்களுக்கு வாய்ப்புக் கிடைக்காது' என்றனர். பின்னர் அந்த ஜோசியக்காரர்கள் ரணிலை விட்டுத் தூரமாகிவிட்டனர். இந்த நிலையில் இன்னொரு ஜோசியக்காரரைப் பிடித்துக்கொண்டார் ரணில். 2020 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த ரணில் அரசியலில் இருந்து ஒதுங்குவதற்கு முடிவெடுத்தார்.

ஆனால்,அந்த புதிய ஜோசியக்காரர்தான் தேசியப் பட்டியலின் ஊடாக நாடாளுமன்றம் செல்லுமாறு ரணிலுக்கு அறிவுரை வழங்கினார்.அப்படிச் சென்றால் ஜனாதிபதியாகும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர் அடித்துக் கூறினார்.

அதன்படியே நாடாளுமன்றம் நுழைந்தார்.பின்னர் ஜனாதிபதியுமானார் ரணில் . 1994 இல் ரணிலுடன் இருந்த ஜோசியக்காரர்கள் சொன்னதும், பிறகு அவருடன் இணைந்த ஜோசியக்காரர் சொன்னதும் கடைசியில் பலித்துவிட்டது. ஆனால்,ஜனாதிபதியானதன் பின் அவர் அந்த ஜோசியக்காரரை ஜனாதிபதி செயலகத்தின் பக்கம் வரவே விடவில்லை. தொலைபேசியில்கூட அவருக்கு நன்றி சொல்லவில்லையாம் ரணில்.'நன்றி மறந்த ரணில்' என்று தனக்கு நெருக்கமான வேறு சில அரசியல்வாதிகளிடம் அண்மையில் கூறிப் புலம்பி இருக்கிறார் அந்த ஜோசியக்காரர். அவரின் சாபத்தால் தான் ரணில் இப்போது சிறைக்குச் சென்றுவிட்டாரோ, என்னவோ?

## இரகசிய விருந்து; குழப்பத்தில் சஜித்



ஓய்வு பெற்றுச் செல்வதற்குத் தயாராக இருக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்க், ரணில் விக்ரமசிங்க,சகல ரத்நாயக்க ,ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்களான கபீர் ஹாசீம் மற்றும் ஹர்ஷ டீ சில்வா ஆகியோரை அழைத்து அண்மையில் இரகசிய விருந்தொன்றை வைத்துள்ளார். கபீர்,ஹர்ஷ ஆகியோர் இந்த விருந்துக்குப் போவது பற்றி சஜித் பிரேமதாஸாவிடம் சொல்லவில்லை.

இருந்தாலும்,அவர்கள் விருந்தில் இருக்கும்போதே சஜித்துக்குத் தகவல் சென்றுவிட்டது. இந்தத் தகவலை வழங்கியது ரணிலின் ஆட்கள்தான். எதற்காக இந்த இரகசியச் சந்திப்பு? ஏன் என்னிடம் இவர்கள் சொல்லவில்லை என்று குழம்பிப் போய் இருக்கிறாராம் சஜித்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமலராஜா:

## தமிழ்ச்சமூகம் இழந்துவிட்ட சிறந்த தொழில் சட்ட நிபுணர்

○ வீரகத்தி தனபாலசிங்கம்



இலங்கையில் குறிப்பாக, தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் இருந்த சிறந்த தொழில் சட்ட நிபுணர்களில் ஒருவரான வேலாயுதம் விமலராஜா மறைந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. முன்னாள் தொழில் நீதிமன்ற நீதிபதியான அவர் கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி தனது 90ஆவது வயதை அடையவிருந்த நிலையில் சரியாக ஒரு மாதத்துக்கு முன்னர் (12 மே 2025 ) அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் காலமானார்.

எனது சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்தவரான விமலராஜாவுடன் இளவயதில் பழகக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. அவர் என்னை விடவும் வயதில் மிகவும் மூத்தவர். நாங்கள் வளர் இளம் பருவத்தினராக இருந்த நாட்களில் விமலராஜா கரவை வெல்லன் விநாயகர் கோவில் திருவிழாக்களுக்கு வந்ததை நான் கண்டிருக்கிறேன். கொழும்பில்தான் அவருடன் ஊடாடக்கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. நான் ஒரு பத்திரிகையாளனாக இருப்பது அவருடன் நெருக்கமாகப் பழகுவதற்கான வாய்ப்பை அதிகரித்தது.. விமலராஜாவின் தந்தையார் கே. வேலாயுதம் எமது ஊரில் பிரபலமான ஓர் ஆங்கில ஆசிரியர்.

அவுஸ்திரேலியாவுக்கு விமலராஜா குடும்பத்துடன் புலம்பெயரும் வரை நாமிருவரும் நெருக்கமான தொடர்பைப் பேணினோம். அவரின் குடும்பத்தவர்களும் கூட எனக்குப் பழக்கமானவர்களே. கடுமையாக சுகவீனமடைவதற்கு முன்னதாக என்னுடன் அவர் அடிக்கடி தொலைபேசியில் தொடர்புகொண்டு நீண்ட நேரம் பலதும் பத்தும் பேசுவார். பழைய அனுபவங்களையும் மீட்பார். அவரது மனைவி இரு வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலியாவில் காலமாகியிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் விமலராஜாவுடன் தொடர்புகொண்டு அனுதாபத்தை தெரிவித்து ஆறுதல் கூற முடியாத அளவுக்கு அவர் சுகவீனமுற்றிருந்தார் என்பது துரதிர்ஷ்டவசமானது.

கரவெட்டிக் கிராமத்தின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறை கொண்டவரான விமலராஜா , விக்னேஸ்வராக் கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரிதும் பாடுபட்டவர். அந்தக் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக்கிளையின் தலைவராக பல வருடங்கள் பணியாற்றிய அவர், நான் அந்தக் கல்லூரியில் கல்வி கற்காதவன் என்ற போதிலும், பழைய மாணவர் சங்கக் கூட்டங்களில் பங்கேற்குமாறு அழைப்பார். " நீ அங்கு கல்வி கற்காவிட்டாலும், எந்தவொரு கரவெட்டியானும் விக்னேஸ்வராவுடன் தன்னை அடையாளப்படுத்தாமல் இருக்க முடியாது" என்று நகைச்சுவையாக அவர் கூறுவார். அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றவர்.

நாமெல்லோரும் என்றென்றைக்கும் பெருமைப்படக்கூடியதாக தொழில் சட்டத்துறையில் சிறந்து விளங்கிய விமலராஜா கைத்தொழில் மற்றும் தொழில் சட்டவாதிகள் மத்தியில் மிகுந்த அறிவார்ந்தவர்களில் ஒருவராக விளங்கினார். தொழில் சட்டங்களில் ஆழமான ஆய்வுகளைச் செய்வதில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஆரம்பத்தில் கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத்தில் இருபது வருடங்களாகப் பணியாற்றியபோது நாட்டின் பல பாகங்களிலும் நீதிமன்றங்களில் கைத்தொழில் உறவுகளுடன் கூடிய முக்கியமான வழக்குகள் பலவற்றைக் கையாண்டார். தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் அதிகாரி என்ற வகையில் தொழில் முகாமைத்துவ மகாநாடுகள் பலவற்றுக்கு விமலராஜா தலைமை தாங்கியதுடன் நீண்டகாலமாக இழுபறிப்பட்ட தொழில் பிணக்குகள் பலவற்றுக்குத் தீர்வையும் கண்டார். அதற்காக தொழில் திணைக்களத்தில் அவருக்கு தனித்துவமான ஒரு மதிப்பு இருந்தது.

சட்டக்கல்லூரியில் படித்து சட்டத்தரணியாக வெளியேறியதும் 1978 ஆம் ஆண்டில் தொழில் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற்ற விமலராஜா கொழும்பிலும் நீர்கொழும்பிலும் பணியாற்றினார். வாதிகள், பிரதிவாதிகள் தரப்பில் பிரபலமான சட்டத்தரணிகள் முன்னிலையான சிக்கலான வழக்குகள் பலவற்றை திறமையாக கையாண்ட விமலராஜாவின் பல தீர்ப்புகளை மேல்நிலை நீதிமன்றங்களும் உறுதிப்படுத்தின.

1991 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற அவர் அதற்குப் பிறகு தொழில் பிணக்குகள் சம்பந்தப்பட்ட பல வழக்குகளில் முதல்நிலை நீதிமன்றங்களிலும் மேல்நிலை நீதிமன்றங்களிலும் சட்டத்தரணியாக முன்னிலையானார். கைத்தொழில் நீதிமன்ற நடுவர்கள் சங்கத்தின் தலைவராக ஆறு வருடங்கள் பதவி வகித்த விமலராஜா 1996 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட கைத்தொழில் சட்ட நிறுவனத்தின் செயலாளர் நாயகமாகவும் பணியாற்றினார். தொழில் சட்டங்கள் பற்றி அவர் எழுதிய பல்வேறு நூல்கள் அந்தத் துறை சார்ந்தவர்களுக்கு பெரிதும் பயனுடையவையாக இருக்கின்றன.

அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பிறகு அவர் இறுதிவரை இலங்கைக்கு வர முடியாமலே போய்விட்டது. தொழில் சட்டத்துறைக்கும், தமிழ்ச்சமூகத்துக்கும், குறிப்பாக கரவெட்டி மக்களுக்கும் , எனக்கும் அவரது இழப்பு ஈடுசெய்யமுடியாததே!

○ மயூ



# கச்சதீவு:

## வாக்கு முட்டையிடும் தங்கவாத்து!

தமிழக அரசியலில் இப்போது கச்சதீவு ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கின்றது. தமிழகத்தின் பிரதான அரசியல்கட்சிகளும், தலைவர்களும் 'கச்சதீவை மீட்டெடுக்க வேண்டும்' என்ற கோசத்தை ஒரு வலுவான அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துகின்றனர். அந்த வரிசையில் இப்போது புதிதாக அரசியலுக்குள் நுழைந்துள்ள நடிகர் விஜயும் இணைந்திருக்கின்றார். கடந்த வியாழக்கிழமை மதுரையில் அவர் நடத்திய மாநாட்டில், கச்சதீவை இலங்கையிடம் இருந்து இந்திய மத்திய அரசாங்கம் மீட்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

கச்சதீவை இந்தியா மீளப்பெறுவது என்பது சர்வதேச சட்டங்களும், இருநாட்டு அரசியல் உறவுகளும், கடல்சார் எல்லை ஒப்பந்தங்களும் சார்ந்த மிகச் சிக்கலான விடயம். இந்தியா இதை ஒருதலைபட்சமாகச் செய்யமுடியாது. 1974ஆம் ஆண்டிலும், 1976ஆம் ஆண்டிலும் இலங்கையுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது. 1976ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தந்தின் அடிப்படையில் இரு நாடுகளும் கடற்பரப்பைத் தெளிவாகப் பிரித்துக்கொண்டுள்ளன. இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்கக்கூடாது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தகளை முறிக்கவேண்டுமானால் இரு நாடுகளின் இணக்கமும் அவசியமானது.

ஆனால் மாநில மட்டத்தில் செயற்படும் தமிழக அரசியல் கட்சிகள் இந்தச் சிக்கலான உண்மைகளைப் புறக்கணித்து மறைத்து, மக்களின் உணர்வுகளை வாக்குகளாக்கவே முயற்சிக்கின்றன. இலங்கை இறைமையுள்ள நாடு என்ற ரீதியில் தனது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைபவர்களைக் கைது செய்யும் உரிமையைக் கொண்டிருக்கின்றது. தமிழக மீனவர்களும் அந்த அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இலங்கையின் வடக்கில் உள்ள மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியால் பெரிதும் பாதிக்கப்படும் நிலையில் இலங்கைக்கு இந்தக் கைது விடயத்தில் இறுக்கமாகச் செயற்பட வேண்டிய நிர்ப்பந்தமும் இருக்கின்றது. ஆகையால் எல்லைதாண்டியவர்கள் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது அபத்தமானது.


இந்த யாதார்த்த நிலைமையைப் புரிந்து மீனவர் பிரச்சினைக்குரிய தீர்வை நோக்கி நகர தமிழக அரசியல்வாதிகள் எப்போதும் விருப்பம் காட்டியதில்லை. கச்சதீவுப் பிரச்சினையை உயிர்ப்புடன் வைத்திருந்து தமிழக மீனவர்களின் கைது விடயத்தைப் பூதாகரமாக்கி அந்த மக்களின் வாக்குகளைத் தங்கள்பக்கம் திருப்பவே அவர்கள் முயற்சிக்கின்றனர். தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளுக்குப் போட்டியாளராகத் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் நடிகர் விஜயும், தமிழகத்தின் வழமையான அரசியல் வழியிலேயே பயணிக்க ஆரம்பித்திருக்கின்றார் என்பதையே அவரது பேச்சு கோடிகாட்டியிருக்கிறது.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு கச்சதீவு மீட்பு ஒருபோதும் தீர்வாக மாட்டாது. அது எப்போதும் சாத்தியப்படாத ஒரு விடயம். இந்த உண்மையை உணர்ந்திருந்தாலும் அதைப் புறக்கணித்து மக்களின் கவனத்தை ஈர்க்கும் கருவியாக கச்சதீவைப் பயன்படுத்துவதை தமிழக அரசியல்வாதிகள் கைவிடவேண்டும். அவர்களின் இந்தப் போக்கு இந்தப் பிரச்சினை மேன்மேலும் சிக்கலாக்குமே தவிர எவ்விதத்திலும் தணிக்க உதவாது. மக்கள் மீது உண்மையில் அக்கறை இருக்குமானால் சாத்தியமற்ற விடயங்களைக் கூறி மக்களை உசுப்பேற்றுவதை விடுத்து இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைச் சிந்திக்கவேண்டும். அதுவே இரு நாட்டு மீனவர்களுக்கும் நன்மையாக இருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழகத் தலைவர்கள் அதைச் சிந்திக்க மறுக்கின்றனர். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்






ற.அனாகா
தரம் - 3
ஏஞ்சல் சர்வதேச
பாடசாலை




மு.பூர்ணிகா
தரம் 3
சுண்டிக்குளி
மகளிர் கல்லூரி.




S.டிஷான்
தரம் 9B
யாழ்.மத்திய
கல்லூரி.




A.சதுஸ்டிகா
தரம் 8
ஏஞ்சல் சர்வதேச
பாடசாலை



## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

## காந்தியடிகள்



எங்கள் காந்தி இனியவர்
பண்புகள் பலவும் நிறைந்தவர்
அமைதி வழியில் நடந்தவர்
அன்பை சொல்லித் தந்தவர்!


அகிம்சை ஆயுதம் தாங்கி – நம்
அடிமை விலங்கை உடைத்தவர்!
எல்லோரும் இங்கு சமமென
எட்டுத் திக்கும் உரைத்தவர்!

மதுவைத் தீண்டாதிருந்தவர்!
மாமிசம் அறவே மறுத்தவர்!
மனிதநேயம் கொண்டவர்!
மதநல்லிணக்கம் கண்டவர்!

சாதிபேதங்கள் மறுப்பவர்!
சமத்துவப் பாதை வகுத்தவர்!
என்றும் எமது நெஞ்சினில்
நீங்கா இடத்தைப் பிடித்தவர்!

அறவழி அவரது கொள்கையாம்
அதை நாம் பின்பற்றுவோம்!
தேசத்தந்தை காந்திதான்
என்றும் அவர் புகழ் வாழ்கவே

# சாமர்த்தியம் வேண்டும்



ஒரு நாள், நாய் ஒன்று காட்டில் வழிதவறிச் சென்றுவிட்டது.

அப்பொழுது, அங்கு சிங்கம் ஒன்று பசியோடு அலைவதைப் பார்த்த நாய், ஒரு நிமிடம் பதறி இன்றோடு என் கதை முடிந்தது என்று எண்ணியது.

அப்பொழுது அங்கு கிடந்த எலும்புத்துண்டு களைப் பார்த்ததும் அருமையான திட்டம் ஒன்றைத் தீட்டியது. சிங்கம் வரும் வழியில் திரும்பி உட்கார்ந்துகொண்டு, எலும்புத் துண்டு களைச் சுவைக்கத் தொடங்கியது.

சுவைத்துக்கொண்டே சத்தமாக, "சிங்கத்தைக் கொன்று தின்பது எவ்வளவு சுவையாக உள்ளது. ஆனால் வயிறு நிறையவில்லை. இன்னொரு சிங்கம் கிடைத்தால், வயிறு நிறைந்து விடும்" என்று கூறியது.

இதைக்கேட்ட சிங்கம் "ஐய்யோ..! இந்த நாய் சிங்கத்தை அல்லவா கொன்று தின்கிறது" என்று நினைத்துப் பயந்து அங்கிருந்து ஓடியது.

இதையெல்லாம் மரத்தின் மேல் இருந்து குரங்கு ஒன்று பார்த்துக்கொண்டிருந்தது.

சிங்கத்தை ஏமாற்றிய இந்த நாயை சிங்கத்திடம் போட்டுக்கொடுத்தால், சிங்கத்தின் நட்பைப் பெற்று வாழ்நாளெல்லாம் பயம் இல்லாமல் வாழலாம் என்று நினைத்தது.

உடனே சிங்கத்திடம் சென்று, நாய் செய்த தந்திரத்தைப் பற்றிச் சொன்னது.


குரங்கு சொன்னதைக் கேட்ட சிங்கம் கோபம் கொண்டு, "இப்பொழுது அந்த நாயை என்ன செய்கிறேன் பார். நீ என் முதுகில் ஏறிக்கொள்" என்று குரங்கை முதுகில் ஏந்திய படி நாய் இருந்த இடத்தை நோக்கி ஓடியது.

தன்னை நோக்கிச் சிங்கம் பாய்ந்து வருவதைப் பார்த்த நாய், முன் போலவே திரும்பி உட்கார்ந்து கொண்டு, "இந்தக் குரங்கை அனுப்பி ஒரு மணி நேரமாகிவிட்டது. இன்னும் ஒரு சிங்கத்தைக்கூட ஏமாற்றி அழைத்து வரவில்லையே" என்று உரக்கக் கூறியது.

இதைக் கேட்டதும், சிங்கம் குரங்கைத் தூக்கி எறிந்துவிட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் ஓடியே விட்டது.



## சரியாக இணையுங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org